புத்திப் பரீட்சைகள்.

INTELLIGENCE TESTS

ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்கு

ஆங்கில மூலநூலாசிரியர்:

அரசினர் ஆசிரியர் கல்லூரி அதிபர்,

திரு. யு. ஜி. பி. டி. சில்வா அவர்கள்.

தமிழாக்கம்:

முதலியார். குல. சபாநாதன் அவர்கள்.

கொழும்பு, எம். டி. குணசேன அன் கம்பெனி லிமிடெட்,

அச்சியந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது.

(கொப்பிரைட் ரிசர்வ்ட்) 7ம் பதிப்பு—1956. விலை ரூ. 1-25

புத்திப் பரீட்சைகள்.

INTELLIGENCE TESTS

ஐந்தாம், ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்கு

ஆங்கில முதனூலாசிரியர்:

அரசினர் ஆசிரியர் கல்லூரி அதிபர்,

திரு. யு. ஜி. பி. டி. சில்வா அவர்கள்.

தமிழாக்கம்:

முதலியார். குல. சபாநாதன் அவர்கள்.

கொழும்பு, எம். டி. குணசேன அன் கம்பெனி லிமிடெட்,

அச்சியந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது.

பிந்திய வெளியீடு ஜனவரி 1956.

உரிமைபெற்ற வெளியீடு

பிரசுரித்து வெளியிடுவோர்:—
M. D. *குணசேன அன் கம்பெனி லிமிடெட்.*
217, நோறிஸ் றேட், கொழும்பு—PE—3633-1/56

முன்னுரை

புத்தியைப் பரீட்சிப்பதில் மேனுட்டார் அதிக ஆராய்ச்சி செய்துள்ளனர். அத்தகைய ஆராய்ச்சியின் பயனுகக் குழந்தைகளின் கல்விமுறை பற்றிய பிரச்சினைகளை மட்டுமன்றி வளர்ந்தோர் தொழிற்றுறைக் கல்விமுறை பற்றிய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பது எளிதாயிற்று. ஆனல் இலங்கையில் புத்திப் பரீட்சைகளைப் பாடசாலை களில் கையாளுதல் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றதெனலாம். எனவே, புத்திப் பரீட்சைகளை ஆசிரியர்கள் நன்கு அறிந்துகொள்வதற்கும், இலங்கை மாணவர்களின் வயசுத் தொகுதிக்கேற்ற (5-ம் வகுப்பும், அதற்கு மேற்பட்டனவும்) பரிமாணத்தை நிச்சயித்தற்கும் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரி அதிபர். *எச். எஸ். பெரேரா* அவர்கள் புத்தியைப் பரீட்சிக்கும் விஷயத்தில் இந்நாட்டில் முதன்முதலாகப் பெரும் தொண்டாற்றி வழிகோலியுள்ளார். "பெரேரோவின் கட்புலப் பரீட்சை" எனப்பெயரிய புதிய பரீட்சையை முதன்முதலாக அமைத்துத் தந்தவர் இப்பெரியாரே. இது பாஷை சம்பந்தமற்ற பரீட்சையாகும். திரு. பெரேரா அவர்கள் எனக்கு அடிக்கடி கூறிய புத்திமதியும், செய்த உதவியும் பல. அவற்றுக்காக எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துங் கடப்பாடுடையேன்.

இத்தகைய கல்வியாராய்ச்சிக்கு அதிக நேரமும் உழைப்பும் தேவை. அன்றியும் ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பும் இன்றியமையாதது. எனவே, இப் பரீட்சைகளை உபயோகிக்கும் ஆசிரியர்கள் இந்நூலின் இறுதியிற் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ள விபரங்களையனுப்பி, பரிமாணத்தை நிச்சயிப்பதில் எனக்கு உதவிபுரியுமாறு அவர்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

யு. ஜி. பி. டி. சில்வா,

அரசினர் ஆசிரியர் கல்லூரி,

கொழும்பு, 1941-ம் ஸு பங்குனி மீ 25-ந் உ.

புத்திப் பரீட்சைகளும் அவற்றை உபயோகிக்கும் விதமும்

உபயோகம்: பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளைகள் எவ்வளவு புத்திசாலிகளாய் இருக்கிறார்கள் என்பதை அறியப் பெரிதும் விரும்புவார்கள். பல ஆசிரியர்கள் பாடசாலைக்குரிய பாடத்தில் ஒரு மாணவன் பெறும் புள்ளியிலிருந்து அவனுடைய புத்திசாலித்தனத்தை அளவிடுகிறார்கள். இன்னுஞ் சில ஆசிரியர்கள் அடக்கம், நேர்மை முதலிய அவனுடைய குணங்களைக்கொண்டு அவனுடைய புத்திசாலித்தனத்தை அளவிடுகிறார்கள். வேறு சில ஆசிரியர்கள் மாணவனுடன் கூடப் பிறந்தவர்களுடைய ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு அவனுடைய புத்திசாலித்தனத்தை அளவிட முயல்கின்றனர். இவ்வாறு செய்வதன் பயனாக ஒரு ஆசிரியரால் புத்திசாமர்த்தியமற்றவன் — மந்தன் — எனக் கருதப்பட்ட மாணவன் பிறிதோர் ஆசிரியரால் சிறந்த புத்தியுள்ளவன் எனக் கருதப்படவுங்கூடும். மேலும் இத்தகைய அநுமானம் திட்டமானதுமன்று. எனவே, இவற்றால் ஆசிரியர்களுக்காவது எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

பாஷை, சரித்திரம் முதலான பாடசாலைப் பாடங்களில் மாணவனுக்குள்ள ஆற்றலை அளவிடுவதற்குப் பாடசாலைகளிலே அநேக பாண்டித்தியப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. பாடசாலைப் பாடங்களிலுள்ள திறமையை மட்டும் ஆதாரமாகக்கொண்டு ஒரு மாணவனுடைய புத்தியை மதிப்பிடுதல் "நரிவால் கொண்டு கடலாழம் பார்ப்பதை" ஒக்கும். இலக்கண பாடத்திலே சிறந்து விளங்கும் ஒரு மாணவன் புத்திசாமர்த்தியத்திலும் சிறந்தவனாக இருக்கவேண்டுமென்ற நியதியில்லை. சரித்திர பாடத்தில் மிகக் குறைவான புள்ளி பெறுதல் காரணமாக ஒரு மாணவனை 'மடையன்' என்று சொல்லிவிட முடியாது. எனவே, ஒரு மாணவனுடைய தனிப்பட்ட சிறப்பாற்றலைக் கொண்டு அவனுடைய பொது ஆற்றலை — புத்தித் திறமையை — அநுமானித்துவிட முடியாது.

மாணவனுடைய புத்தியை மதிப்பிடுவதற்கு பல பரீட்சைகள் இருக்கின்றன. இவற்றிற் சிலவற்றிற்குப் பாஷையறிவே தேவையில்லை. எனவே, எழுத, வாசிக்கத் தெரியாத பிள்ளைகளுக்கும் இத்தகைய பாஷை சம்பந்தப்படாத பரீட்சைகளைக் கைக்கொள்ளலாம். பல பாஷைகள் வழங்கும் பல நாடுகளிலும் பாஷை வேற்றுமையைக் கவனியாது கொடுக்கக்கூடியனவாக மேற்படி பரீட்சைகள் அமைந்திருப்பது இன்னுமொரு சிறப்பாகும். இவ்விதமான பரீட்சைகள் எல்லாருக்கும் ஒரே விதமாகக் கொடுக்கக்கூடியனவாக இருத்தலால் இவற்ருல் மாணவர் அடைந்த பெறுபேறு ஒப்பிட்டுப் பரிசீலனை செய்வதற்றுப் பெரிதும் பயன்படும். எனவே பாஷை சம்பந்தப்படாத பரீட்சைகளே புத்திப் பரீட்சைகளுட் சிறந்தனவாக விளங்குகின்றன. இத்தகைய பரீட்சைகள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபராயிருந்து, காலஞ்சென்ற திரு. எச். எஸ். பெரேரா, அவர்களால் அமைக்கப்பட்டன. இதன் விபரத்தை இலங்கை வித்தியாபோதினி தொகுதி 2—பகுதி 1ல் காண்க. பாஷை சம்பந்தப்படாத பரீட்சைகள் பெரும்பாலும் குழூஉ முறைப் பரீட்சைகளாகும்.

‘பினெற்–சைமன்’ முறை பரீட்சைகளும், ‘ரேமன்–மெரில்’ முறைப் பரீட்சைகளும் பாஷையோடு சம்பந்தப்பட்டன; அன்றியும் தனிப்பரீட்சை முறைகளைத் (Individual) தழுவியுள்ளன. ‘ஒற்றிஸ்’ முறைப் பரீட்சைகளும் பாஷை சம்பந்தப்பட்டவையானாலும், குழூஉ முறைப் பரீட்சைகளாம். இப்புத்தகத்திலுள்ள பரீட்சைகளும் இதே குழூஉ வகுப்பைச் சார்ந்தவையாகும்.

மாணவர்களின் பாஷையறிவை அல்லது கணித அறிவைப் பரீட்சிக்கும் நோக்கத்துடன் வினாக்கள் இப்பரீட்சைகளிற் சேர்க்கப்படவில்லை. எனினும், வினாக்களைப் புலப்படுத்துவதற்குப் பாஷையும் எண்ணும் வாயில்களாக அமைந்துள்ளன.

பரிமாணம்: பரிமாணமற்ற புத்திப் பரீட்சை மிகவும் குறைந்த பயனையே கொடுக்கும். மேலே குறிக்கப்பட்ட பலவகைப் பரீட்சைகளுக்கும் பரிமாணம் கண்டுபிடிக்கப்பட்டது. 21-ம் 35-ம் பக்கங்களிலுள்ள பரீட்சைகளின் பெறுபேற்றை ஆதாரமாகக் கொண்டு 5-ம் வகுப்பு தொடக்கமாக வயசுத் தொகுதிக்கேற்ற (Age group) பரிமாணத்தை நிர்ணயிக்க நான் விரும்புகின்றேன். இப்பரிமாணம் சிறந்ததாதற்குக் குறைந்தது 2000 மாணவர்களுடைய பெறுபேற்றையாவது ஆதாரமாகக் கொண்டு கணிக்கப்படல் வேண்டும்.

இப்பரீட்சைகளை மாணவர்களுக்குக் கொடுக்கும் ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு உதவி செய்வதோடு ஒரு நல்ல காரியத்துக்காகவும் உதவி செய்யக்கூடும். பரீட்சைகள் நடைபெறுங் காலங்களில் புத்திப் பரீட்சை வினாப் பத்திரத்துக்கு மாணவர்கள் செவ்வனே விடையளிப்பதற்கு இப் புத்தகத்திலுள்ள பரீட்சைகள் போதிய பயிற்சியளிக்கும். புத்தியுள்ள பிள்ளையாயிருந்தும், நவீன முறையான பரீட்சையாதலால் விடையளிக்க முடியவில்லையே என்ற சங்கடமும் இதனால் நீங்கிவிடும். ஆசிரியர்களும் பிள்ளைகளின் புத்தித் திறமையை ஓரளவுக்கு மட்டிட முடியும். அப் பரீட்சைகளின் பெறுபேற்றை இந் நூலாசிரியருக்கு அனுப்பினால் பரிமாணம் நிர்ணயித்தலாகிய நல்ல காரியத்துக்கும் உதவி செய்தவர்களாவார்கள். புள்ளி விபரங்களை அனுப்புவதற்கு இரு மாதிரிப் பத்திரங்கள் இந் நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அப்பியாசப் பரீட்சைகள்: இந் நூலில் 1-ம் பக்கம் தொடக்கம் 20-ம் பக்கம் வரையுமுள்ள பரீட்சைகள் அப்பியாசப் பரீட்சைகளாம். ஒரு மாணவன் 21-ம் பக்கம் தொடக்கம் கொடுக்கப்பட்ட பரீட்சைகளுக்கு விடையளிக்கத் தொடங்குமுன்னர் அவனுக்கும் போதிய பயிற்சியளிக்கவே இவ்வப்பியாசங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பரீட்சை அப்பியாசங்கள் செய்யும்போது மாணவனுக்கு ஏற்படுங் கஷ்டங்களை ஆசிரியர் விளங்கப்படுத்தி நீக்கி விடலாம். இயன்றவரை சகலமாணவர்களும் ஒரேயளவு பயிற்சி பெறுகின்றார்களோ என ஆசிரியர் அவதானித்தல் வேண்டும். 1-ம், 2-ம் அப்பியாசங்களை ஒவ்வொரு மாணவனும் ஒரு முறை செய்தாற் போதுமானது. அவற்றை மீண்டும் மீண்டும் செய்யவிடக்கூடாது. இங்ஙனம் செய்யாது தடுப்பதற்கும் பின்னருள்ள பரீட்சைகளுக்கு விடைகளை ஏற்கனவே ஆயத்தஞ் செய்யாமற்றடுப்பதற்கும், இப் புத்தகங்களை ஆசிரியர் மாணவரிடமிருந்து பெற்று தமது பொறுப்பில் ஓரிடத்திற் பூட்டிவைக்கலாம்.

பரீட்சைகளை நடத்தும்போது கவனிக்கவேண்டியவை

1. நேரத்தைத் திட்டமாக வரையறை செய்தல் அத்தியாவசியமாகும்: குறிப்பிட்ட நேரத்தில் 5 விநாடி வேற்றுமையிருப்பினும் சராசரியில் நூற்றுக்கு 1% தொடக்கம் 2% வரை பிழை ஏற்படும். பரீட்சை ஆரம்பமானதும் பரீட்சை முடிக்கவேண்டிய மணித்தியாலத்தையும், நிமிஷத்தையும் கரும்பலகையில் எழுதிவிட வேண்டும். அன்றேல் ஆசிரியருடைய ஞாபகக் குறைவால் பிழை ஏற்படுதல் கூடும்.

2. மாணவர்கள் அப்பியாசப் பரீட்சைகளைச் செய்யமுன் நியமப் பரீட்சைகளுக்கு விடையளிக்க முயலக்கூடாது: மாணவர்கள் பரீட்சை அப்பியாசங்களைச்செய்யும்பொழுது அவர்களுக்கு விளங்காத கேள்விகளை ஆசிரியர் விளங்கப்படுத்தி உதவி புரியலாம். மிகவும் மந்தமான மாணவனும் தான் யாது செய்ய வேண்டுமென அறிந்துகொண்டானேவென ஆசிரியர் கவனித்தல் வேண்டும். பரீட்சை அப்பியாசங்களை ஒரு முறை மாத்திரம் செய்தல் வேண்டும். அதற்குமேல் மாணவர்களுக்கு எவ்வித உதவியும் புரிதல் கூடாது. அன்றியும் மாணவர் நியமப் பரீட்சைக்கு விடையளிக்கும்போது எவ்வித உதவியும் செய்தல் கூடாது.

3. சகல மாணவர்களுக்கும் ஆசனம், வெளிச்சம் முதலியன ஒரே தன்மையாக அமைந்திருத்தல் வேண்டும்: சில மாணவர்களுக்கு வசதியான கதிரைகளும், சிலருக்கு உயரம் குறைந்த மேசைகளும், இன்னுஞ் சிலருக்கு நெருக்கமாயிடப்பட்ட மேசைகளும் கொடுத்தல் கூடாது. மாணவர்களுடைய புலன்களைக் கவரக்கூடிய வேறெந்தப் பொருளையும் பரீட்சை நடைபெறும் இடத்தில் வைத்தல் கூடாது. பரீட்சையை மேற்பார்வை செய்யும் ஆசிரியர் அவசியமில்லாமல் அங்கும் இங்கும் நடந்தும், மாணவர்கள் எங்ஙனம் விடையளிக்கிறார்களென்பதை அவர்களுக்குப் பின்னால் நின்று பார்த்தும் மாணவர்களுக்கு எவ்வித இடைஞ்சலையும் செய்யக்கூடாது.

4. செலவைக் குறைக்கும் நோக்கமாக ஒரேவிதமான வினுத்தாள்களைக் கொடாதுவிடல் கூடாது: *சில மாணவர்கள் இப்புத்தகத்திலுள்ள வினுக்களைப் பார்த்து விடையளிக்கவும், சில மாணவர்கள் கரும்பலகையில் எழுதிவிடப்பட்ட வினுக்களைப் பார்த்து விடையளிக்கவும், சிலர் கோடிட்ட தாள்களிலே பிரதி பண்ணப்பட்ட வினுக்களைப் பார்த்து விடையளிக்கவும் அனுமதிக்கக்கூடாது. அங்ஙனம் செய்யின் சகலருக்கும் ஒரே விதமான வசதி அளித்தல் என்னும் நோக்கம் பிழைபட்டுவிடும். எனவே மாணவர்களுடைய பெறு பேறும், வசதிகள் வசதியீனங்களுக்கேற்ப மாறுபடும்.*

5. அடிமட்டமும், அளிக்கும் றப்பரும் உபயோகிக்க விடுதல் கூடாது: *மாணவர்கள் விடைகளை றப்பர் துண்டினுல் அழிப்பதிலும், கீழ்க்கோடு இடுவதற்கு அடிமட்டம் உபயோகிப்பதிலும் நேரத்தை வீணுகக் கழிக்கிருர்கள். எல்லாவிதமான கோடுகளும் கையினுல் தெளிவாகக் கீறவேண்டும். எழுதிய விடையை மாற்றி எழுத விரும்பினுல் முன்னர் எழுதிய விடையின்மேல் சுத்தமாக ஒரு கோடு கீறி அதை நீக்கிவிட்டுப் பின்னர் சரியான விடையைக் கவனமாக ஆலோசித்து எழுதவேண்டும். அழிக்கும் றப்பர் உபயோகிக்கக்கூடாதெனவே சில மாணவர் அதற்குப் பதிலாகத் தமது கைவிரலை உபயோகித்தலாகிய கெட்ட வழக்கத்தைக் கையாளவும் கூடும். இதனை எப்பொழுதும் தவிர்க்கும்படி வற்புறுத்த வேண்டும்.*

6. பரீட்சையில் மிக்க ஆர்வத்தினுலோ, அல்லது ஏக்கத்தினுலோ மாணவர் மன அமைதி குலையக் கூடியதாய் ஆசிரியர் நடந்துகொள்ளக்கூடாது: *"இது மிகவும் முக்கியமான பரீட்சை; இதிற்சித்தியடையாதவர்கள் அடுத்த வகுப்புக்கு மாற்றிவிடப்படமாட்டார்கள்." என்று ஆசிரியர் கூறி மாணவர்களிடையே ஆவலையும் ஏக்கத்தையும் உண்டுபண்ணிவிடுதல் கூடாது. சாதாரண வகுப்பு நேரத்தில் ஒரு ஆசிரியர் நடந்து கொள்வதிலும் சிறிது ஊக்கமுடையவராக நடந்துகொள்ள வேண்டுமேயன்றி, அதிகம் புத்திமதி கூறி மாணவர் மன நிலையைக் கலக்கிவிடுதல் கூடாது.*

7. **மாணவர் ஒருவரிடமிருந்து ஒருவர் உதவிபெருமல் இருப்பதற்காகப் போதிய இடைவெளி விட்டு ஆசனங்களை ஒழுங்கு செய்யவேண்டும்:** *இம்மாதிரியான நவீன பரீட்சைக்கு விடையளிக்கும் சமயத்தில் மற்றவர்களைப்போலத் தாமும் செய்யவேண்டுமென்ற அவா அனேக மாணவர்களுக்கு ஏற்படும். இருக்கும் நிலைமை மற்றவர்களைப்பார்த்து எழுத வசதியாஞல் மாணவர் அவ்வாறு செய்யும்படி தூண்டப் படுவார்கள். அங்ஙனம் அவர்கள் செய்வது மற்றவர்களைப் போலத் தாமும் விடையளிக்க வேண்டுமென்ற அவா விஞலன்றி நேர்மையீனமாக நடந்துகொள்ளவேண்டுமென்ற கருத்திஞலன்று. ஆகையால், ஆசிரியர் அவ்விதம் நடைபெருது கவனமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.*

8. **ஆசிரியர் எவ்விதமான சந்தர்ப்பத்திலும் பரீட்சைக் கேள்விகளையாதல், பரீட்சை நடத்தும் விதிமுறைகளையாதல் திருத்தியோ மாற்றியோ அமைத்தல் கூடாது:** *பரீட்சையிற் சிறியதொரு மாற்றம் செய்தாலும் எல்லாருக்கும் ஒரே பரீட்சை என்ற தன்மை மாறிவிடும். சிற்சில இடங்களிற் சிறு மாற்றங்களைச் செய்ய ஆசிரியருக்கு விருப்பம் உண்டாகலாம். இவ்வகையான சந்தர்ப்பங்களில் ஆசிரியர் தாம் செய்யவிரும்பும் திருத்தங்களைப்பற்றி எனக்கு அறிவித்தல் வேண்டும். அவ்விதம் செய்யாமல் ஆசிரியர் எவ்விதமான சிறு மாற்றத்தையேனும் செய்தல் கூடாது. அதஞல் யான் கணிக்கும் பரிமாணம் பிழைபட நேரிடும்.*

புத்திப் பரீட்சைகள்

(V-ம் வகுப்பு)

1-ம் அப்பியாசம்

(**குறிப்பு:** இது பயிற்சிக்காகவே ஆதலின் நேரத்தைத் திட்டமாகக் குறிக்கவில்லை.)

A

விளக்கம்: கீழே சோடி சோடியாகப் பல சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில சோடிகளில் இரண்டு சொற்களும் ஒரே கருத்துடையன. சில சோடிகளில் இரண்டு சொற்களும் வேறு வேறு கருத்துடையன; அல்லது எதிரான கருத்துடையன. இரண்டு சொற்களும் ஒரே கருத்துடைய சோடிகளுக்கு நேரே உள்ள புள்ளிக்கோட்டில் 'ஒ' என்னும் எழுத்தை எழுதுக. மற்றைய சோடிகளுக்கு நேரேயுள்ள புள்ளிக்கோட்டில் 'எ' என்னும் எழுத்தை எழுதுக.

உதாரணம்:— 1. சிறிது, பெரிது.................எ ...

2. சென்றான், போனான்.........ஒ.........

இதுபோலவே பின் வருவனவற்றுக்கும் விடை எழுதுக.

3. கருமை, வெண்மை ...
4. நன்மை, தீமை ...
5. மேல், கீழ் ...
6. போதல், வருதல் ...
7. சூடான, குளிரான ...
8. விரைவாக, கெதியாக ...
9. வன்மை, மென்மை ...
10. சரி, பிழை ...
11. நேரான, வளைவான ...
12. ஒப்பு, எதிர் ...
13. நீண்ட, குறுகிய ...
14. களைத்த, இளைத்த ...
15. கோபம், வெகுளி ...
16. அறிந்து, அறியாது ...

17. கூரான, மழுங்கிய ...
18. அசுத்தமான, அழுக்கான ...
19. உயர்வு, தாழ்வு ...
20. துக்கம், சுகம் ...
21. நண்பன், பகைவன் ...
22 விருப்பு, வெறுப்பு ...
23. இருள், வெளிச்சம்
24. அசை, அவா
25. மூடுதல், திறத்தல்
26. நனைந்த, ஈரமான
27. மலர், பூ

B

உதாரணம்:— 28. மணிக்கூடு: நேரம்:: யார் (அடி, நீளம், நீர், மழை)

29. மேசை: மரம்:: பானை: (சட்டி, நெருப்பு, கால், களிமண்)

விளக்கம்:— 28-வது உதாரணத்தில் மணிக்கூட்டுக்கு நேரம் எவ்வாறு பொருத்தமோ அதுபோலவே யாருக்கு நீளம் பொருத்தமாயிருக்கிறது. (மணிக்கூட்டில் நேரம் பார்க்கலாம். யாரினால் நீளத்தை அளக்கலாம்). எனவே அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களில் நீளம் என்னும் சொல்லின்கீழ் கோடிடப்பட்டிருக்கிறது.

29-வது உதாரணத்தில் மேசைக்கு மரம் எப்படிப்பட்ட பொருத்தமோ அதுபோன்ற பொருத்தமாக பானைக்குக் களிமண் இருக்கிறது. (மேசை மரத்தினால் செய்யப்பட்டது; பானை களிமண்ணால் செய்யப்பட்டது). ஆகையால், அடைப்புக் குறிக்குள் இருக்கும் நான்கு சொற்களில் களிமண் என்னுஞ் சொல்லின் கீழ் கோடிடப்பட்டிருக்கிறது.

இதுபோலவே கீழுள்ளவற்றிலும் மிகப் பொருத்தமான சொற்களுக்குக் கீழே கோடிடுக.

30. நன்மை: தீமை:: நீளம்: ... (அதிக, நன்மை, பிழை, அகலம், கெட்ட)
31. குமாரன்: குமாரி:: அரசன்: ... (மகள், நாடு, அரசி, குடும்பம்)
32. கத்தி:: வெட்டுதல்:: பேனை: ... (மை, பாடசாலை, அலகு, எழுதுதல்)
33. மாமன்: மாமி:: சகோதரன்: ... (அண்ணன், சகோதரி, மூத்த, இளைய)
34. கமக்காரன்: காணி:: ஆசிரியன்: ... (பேனை, பாடசாலை, தானியம், காணிகள்)
35. நெருப்பு: சூடு:: பனி: ... (இரவு, குளிர், தண்ணீர், வெள்ளை)
36. உறைப்பு: மிளகாய்:: இனிப்பு: ... (உப்பு, நோய், சீனி, வைத்தியன்)
37. அங்கே: அது:: இங்கே: ... (மேல், இது, எங்கே, உள்ளே)
38. பலா: பழம்:: கத்தரி: ... (பூ, காய், இலை, விதை)

39. காகம்: கறுப்பு: பால்: ... (பசு, வெள்ளை, சட்டி, தயிர்)
40. ஆண்: அவன்:: பெண்: ... (பெண்கள், அவர், அவள், பெண்மணி)
41. மோதிரம்: விரல்:: செருப்பு: ... (பொன், சப்பாத்து, நகை, கால்)
42. ஞாயிற்றுக்கிழமை: சனிக்கிழமை:: நாளை: ... (திங்கட்கிழமை, இன்று, நேற்று, புதன்கிழமை)
43. பசு: கன்று:: கோழி: ... (குட்டி, குஞ்சு, பிள்ளை, குழந்தை)
44. விளக்கு: எண்ணெய்:: புகையிரதம்: ... (புகையிரதப்பாதை, சீட்டு, எரி, கரி)
45. மயில்: தோகை:: பாம்பு: ... (நஞ்சு, படம், கடி, நாகம்)
46. கொடு: எடு:: போ: ... (வா, நட, வீடு, ஓடு)
47. கிழக்கு: மேற்கு:: காலை: ... (இரவு, உதயம், மாலை, உச்சி)
48. குரைக்கும்: நாய்:: கூவும்: ... (அழும், சேவல், புறா, நரி)
49 லை: கால்:: ஆதி: ... (கால்கள், மரம், அந்தம், நுனி)

C

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எண்கள் ஏதோ ஒரு ஒழுங்குபற்றி அமைந்திருக்கின்றன. அவ்வொழுங்கு முறையைக் கவனித்து வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.

உதாரணம்:—50.	1,	3,	5,	7,	9	...	(...11, 13...)
51.	3,	$3\frac{1}{4}$,	$3\frac{1}{2}$,	$3\frac{3}{4}$,	4	...	(...$4\frac{1}{4}$, $4\frac{1}{2}$...)
52.	2,	4,	6,	8,	10,	...	(......, ...)
53.	19,	17,	15,	13,	11,	...	(......, ...)
54.	6,	11,	16,	21,	...	...	(......, ...)
55.	2,	4,	8,	16,	...	...	(......, ...)
56.	$1\frac{1}{2}$,	2,	$2\frac{1}{2}$,	3.	...	...	(......, ...)
57.	20,	25,	30,	35,	...	...	(......, ...)
58.	77,	66,	55,	44,	...	...	(......, ...)
59.	1000,	500,	250,	...	...	...	(......, ...)
60.	IV,	VI,	VIII,	X,	...	...	(......, ...)
61.	7,	10,	14,	9,	28,	8	(......, ...)
62.	2,	7,	13,	20,	28,	...	(......, ...)

63.	$2\frac{1}{4}$,	$3\frac{1}{2}$,	$4\frac{3}{4}$,	6,	...	...	(......, ...)
64.	1.4,	2.8,	4.2,	5.6	...	...	(......, ...)
65.	100000,	10000,	1000,	...	...	...	(......, ...)
66.	75,	10,	76,	20,	77,	30	(......, ...)

D

விளக்கம்:— கீழே ஒவ்வொரு வரிசையிலும் நான்கு நான்கு சொற்கள் இருக்கின்றன, அவற்றுள் மூன்று சொற்கள் ஏதாவதொருவகையில் ஒற்றுமையுடையன. ஒற்றுமையில்லாமல் தனியாக நிற்கும் ஒரு சொல்லைக் கண்டு பிடித்து அதற்குக் கீழே கோடிடுக.

உதாரணம்:— 67. தாமரை, முல்லை, பனங்கிழங்கு, மல்லிகை.
68. ஓடுதல், ஆடுதல், துள்ளல், நித்திரை

67-ம் உதாரணத்தில் பனங்கிழங்கைவிட மற்றைய மூன்றும் பூக்கள், ஆகவே பனங்கிழங்கு தனித்து நிற்கிறது. எனவே அதற்குக் கீழே கோடிடப்பட்டிருக்கிறது.

68-ம் உதாரணத்தில் நித்திரையைவிட மற்றை மூன்றும் உடம்பின் அசைவினால் உண்டாகும். ஆகவே நித்திரை என்னுஞ் சொல்லுக்குக் கீழே கோடிடப்பட்டிருக்கிறது.

69. பலாப்பழம், மாம்பழம், அன்னாசிப்பழம், முல்லைப்பூ.
70. சிவப்பு. நீலம், பிரகாசம், பச்சை
71. பானை, பேனை, சட்டி, அகப்பை.
72. மாமன், பிதா, சகோதரன், [illegible]
73. கந்தன், வேலன், [illegible], [illegible]
74. எமது, நமது, என், உமது.
75. நல்ல, அழகான, செழிப்பான, கெட்ட.
76. பூனை, நாய், எருது, பருந்து.
77. பெட்டி, நாற்காலி, துவக்கு, மேசை.

78. நீளமான, வளர்ந்த, உயரமான, குறுகலான.
79. நின்றான், நடக்கிறான், ஓடுகிறான், போனான்.
80. ஆடுகிறாள், உண்ணாள், பாடுகிறாள், தேடுகிறாள்.
81. மண்வெட்டி, கத்தி, கோடரி, பானை.
82. கை, கால், கழுத்து, தொப்பி.
83. மூன்று, ஐந்து, ஏழு, எட்டு.
84. 1268, 6812, 2349, 1826.
85. படித்தவன், அறிவாளி, புத்திமான், மந்தன்.
86. மாவலிகங்கை, கொழும்பு, கண்டி, காலி.
87. ஆறு, குளம், தீவு, நீரோடை.
88. நேர்மை, வஞ்சகம், பொறுமை, உண்மை.

E

விளக்கம்:— கீழே கொக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் மும்மூன்று விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கேள்விக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்தெடுத்து அதற்குக் கீழே கோடிடுக.

உதாரணம்:— 89. நாங்கள் ஏன் புத்தகங்கள் வாசிக்கின்றோம்?
- (i) காலத்தைக் கழிக்க வேறு வழியில்லாமையால்;
- (ii) அறிவையும் இன்பத்தையும் தரும் ஆதலால்;
- (iii) அவை மிகவும் மலிவாயிருப்பதால்.

90. நாம் ஏன் கடிகாரத்தை உபயோகிக்கிறோம்?
- (i) அதனுடைய சத்தஞ் செவிக்கு இனிமையாயிருப்பதால்;
- (ii) அது அழகாயிருப்பதால்;
- (iii) நேரம் பார்க்க வேண்டியிருப்பதால்.

91. பூனையை ஏன் வளர்க்கிறோம்?
- (i) எலிகளைப் பிடிக்குமாதலால்;
- (ii) அழகான மிருகமாதலால்;
- (iii) அதன் மயிர் மிருதுவாயிருக்குமாதலால்.

92. மனிதர் ஏன் மருந்து குடிக்கிறார்கள்?
(i) அதன் சுவை கசப்பாயிருப்பதால்;
(ii) அது நோயைத் தீர்க்குமாதலால்;
(iii) அதைக் குடிக்கப் பழகிக்கொள்ளவேண்டுமாதலால்.

93. மிருகங்களை வீணாக வருத்துவது ஏன் பிழை?
(i) ஆசிரியர் விரும்பமாட்டார் ஆதலால்;
(ii) மிருகங்களுக்குப் பிள்ளைகளிடத்து அதிக விருப்பமாதலால்;
(iii) மிருகங்களை வருத்துவதை ஒருவருமே விரும்பமாட்டாராகையால்.

94. நாக்கள் ஏன் சுத்தமாயிருக்கவேண்டும்?
(i) சுத்தம் சுகவாழ்வுக்கு வழியாதலால்;
(ii) சுத்தமாயிருப்பதற்கு அதிக பணம் தேவையில்லையாதலால்;
(iii) சுத்தமுள்ளவர்கள் உடையைச் சுத்தமாக வைத்திருப்பார்களாதலால்

95. நாம் குடையை ஏன் உபயோகிக்கின்றோம்?
(i) அது கறுப்பு நிறமுடையதாதலால்;
(ii) மழையில் நனையாமல் பாதுகாக்குமாதலால்;
(iii) அது எங்கள் நாட்டில் செய்யப்படுவதால்.

96. சினேகிதர்களாற் பிரயோசனமென்ன?
(i) எங்களுக்குக் கிடைக்கும் வெகுமதிகளில் அவர்கள் பங்குபற்றுவார்கள்;
(ii) நமக்கு உதவிசெய்து புத்தி கூறுவார்கள்;
(iii) விடுமுறை நாட்களில் எங்களுக்குக் கடிதம் எழுதுவார்கள்.

97. விரைவாக ஓடிக்கொண்டிருக்கும் வண்டியின் சில்லு ஒன்று கழன்று விழப்போகும் தருணத்தில் கண்டால் என்ன செய்வீர்?
(i) நின்ற இடத்தில் நின்றுகொண்டு பரிதாபத்துடன் பார்ப்பேன்;
(ii) எனது கைகளைத் தட்டி அல்லது வேறுவிதமாகச் சத்தம் செய்து வண்டியிலுள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்வேன்;
(iii) வண்டிக்குப் பின்னால் ஓடி இழுத்து நிறுத்திவிடுவேன்.

98. நாம் சம்பாதிக்கும் பணம் முழுவதையும் ஏன் செலவு செய்யக்கூடாது?
   (i) செலவழித்தால் பணக்காரராயிருக்கமுடியாது ஆதலால்;
   (ii) நோய் வந்தபோதும், முதுமைப் பருவத்திலும் செலவுசெய்ய ஏதாவது சேமித்து வைத்திருக்க வேண்டும் ஆதலால்;
   (iii) பணப் பெட்டியை வெறும் பெட்டியாய் விடக்கூடாது ஆதலால்.

99. பெண்கள் நகை அணிவதேன்?
   (i) பணத்தைச் செலவுசெய்யவேண்டுமாதலால்;
   (ii) தம்மை அழகு செய்யவேண்டுமாதலால்;
   (iii) ஆண்கள் நகையணிய விரும்பார்கள் ஆதலால்.

100. பிரயாணிகள் நெருக்கமாக உள்ள புகையிரதத்தில் நீர் இருந்துகொண்டு செல்லும்பொழுது வயது சென்ற கிழவி ஒருத்தி நின்றுகொண்டிருக்கக்கண்டால் என்ன செய்வீர்?
   (i) கவனியாமலிருப்பேன்;
   (ii) அவள் விழுந்தால் உதவிசெய்யத் தயாராயிருப்பேன்;
   (iii) எழுந்து எனது இருப்பிடத்தை அவளுக்குக் கொடுப்பேன்.

F

101. இரு கோடுகளுக்குமிடையில் ஒரு வட்டம் வரைக....................... ....

102. உமது வயது 28க்குக் குறைவானால் சதுரத்தினுள்ளே "கு" என்னும் எழுத்தை எழுதுக. 28க்குக்கூடவானால் ஒரு வருஷத்துக்குள்ள மாதங்களின் தொகையைச் சதுரத்தினுள்ளே எழுதுக.

கு

103. இன்று புதன்கிழமையானால் நாளை நின்று என்ன கிழமை?...

104. யா, ந், க, தை, என்னும் எழுத்துக்களை ஒரு ஆண்பிள்ளையின் பெயர் வரக்கூடியதாய் நிரைப்படுத்தி எழுதுக...

105. "அரசன் அன்றுகொல்லும் தெய்வம் நின்று கொல்லும்." இவ்வாக்கியத்திலுள்ள தனி மெய்யெழுத்து எத்தனை?...

106. 24 இலும் பார்க்க 2 குறைவான எண்ணுடன் ஒன்றை இரண்டு முறை கூட்டுக.............................. ....

107. முன்னறி, அன்னையும், தெய்வம், பிதாவும். இச் சொற்களைக்கொண்டு பொருள் தரும் நீதி வாக்கியம் ஒன்றை அமைத்து எழுதுக...

108. மல்லிகை, முல்லை, தாமரை என்பன வாசம் தரும்..................................புள்ளிக்கோட்டில் பொருத்தமான சொல் எழுதுக.

109. தச்சனுக்கு வேண்டிய கருவிகள் வாள், உளி, சுத்தியல், ஊசி என்பவை. இவ்வாக்கியத்துக்குப்பொருத்த மில்லாத சொல்லை எழுதுக...

110. டு ஆ டு மா ள் க ட் கா ல் டி ல் பு ய் மே ன் கி ன ற
மேலே கொடுக்கப்பட்ட எழுத்து வரிசையில் முதலாமெழுத்து இரண்டாமெழுத்தாகவும் இரண்டா மெழுத்து முதலாமெழுத்தாகவும் மூன்றும் எழுத்து நான்காம் எழுத்தாகவும் நான்காம் எழுத்து மூன்றுமெழுத்தாகவும் இவ்விதம் எல்லா எழுத்துக்களும் இடம்மாறி இருக்கின்றன. இதில் 8-ம் எழுத்து எது?................ ....

G

விளக்கம்:—கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியின் இறுதியிலும் பல விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கேள்விக்கும் சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

உதாரணம்:—111. புவனேஸ்வரி திலகேஸ்வரியிலும் கரியவள். ஆனால் அன்னபூரணியிலும் வெளுத்தவள். இவர்கள் மூவரிலும் அதிகம் வெளுத்தவள் யார்?
(திலகேஸ்வரி, புவனேஸ்வரி, அன்னபூரணி)

112. கந்தன் பூதனிலும் விரைவாக ஓடுவான். நாகன் பொதுவாக ஓட்டத்தில் பூதனிலும் விரைவு குறைந்தவன். ஒரு ஓட்டப் பந்தயத்தில் கடைசியாக வருபவன் யார்?

(கந்தன், பூதன், நாகன்)

113. கணக்குப் பாடத்தில் கந்தையா சின்னையாவிலும் கெட்டிக்காரன். சின்னையா பொன்னையாவிலும் அதிகம் கெட்டிக்காரன். இவர்களில் அதிகம் கெட்டிகாரன் யார்?

(கந்தையா சின்னையா, பொன்னையா)

114. ஒரு குடும்பத்தில் உள்ள சகோதரிகள் நால்வருள் கமலாவதி அதிகம் இளையவள். மல்லிகைப்பூ வெண்ணிறமுடையதென்பது அவர்கள் நால்வருக்கும் தெரியும். ஒரு நாள் கமலாவதி தன்னுடைய சகோதரிகளிடம் போய் "எனது மல்லிகைப் பந்தல் நிறையப் பூத்திருக்கின்றது" என்றாள். "உன்னுடைய பந்தல் தூரத்தில் நின்று பார்க்கும்போது வெள்ளைக் கம்பளம்போலத் தோன்றும்" என்று கலியாணி சொன்னாள். "உன்னுடைய பந்தல் தூரத்தில் பார்க்கும்போது சந்நியாசியினுடைய வஸ்திரம் போலத் தோன்றும்" என்றாள் அருந்ததி. "உன்னுடைய பந்தல் தூரத்தில் நின்று பார்க்கும்போது இரத்த வெள்ளம் போலத் தோன்றும்" என்றாள் சீதை. இவர்களுடைய வாக்கியங்களில் யாருடைய வாக்கியம் உண்மையானது?

(கலியாணி, அருந்ததி, சீதை)

115. மூன்று மரங்கள் ஒரே நேர் வரிசையில் நிற்கின்றன. மாமரம் தென்னை மரத்துக்கு வலப் பக்கத்தில் நிற்கின்றது. தென்னைமரம் பலாமரத்துக்கு வலப் பக்கத்தில் நிற்கிறது. நடுவில் உள்ள மரம் எது?

(மாமரம், தென்னைமரம், பலாமரம்)

116. ரோசாப்பூவின் காம்பில் முள் உண்டு. கிருஷ்ணன் தந்த பூவுக்கு நீண்ட காம்பு உண்டு. ஆனால் முள் இல்லை. அவன் தந்தது ஒரு ரோசாப்பூவா?

(ஆம், இல்லை, சொல்லமுடியாது)

117. கீழே கொடுக்கப்பட்ட எண்களில் எட்டுக்கு மேற்பட்ட இரட்டை எண்கள் எத்தனை?
10, 4, 42, 16, 13, 9, 26, 14, 23, 92, 66, 93, 78, 20, 6.

(4, 5, 6, 7, 8, 9, 10)

118. ஒரு மாணவன் தன் நண்பனுக்குக் கடிதம் எழுதும்போது மற்றவர்களுக்கு விளங்காதபடி இரகசியமாகத் தங்களுக்கு விளங்கக்கூடிய குழூஉக் குறியை அமைத்து எழுதினான். நல்ல சுகம் என்பதை நந நல் நல நசு நக நம் என்று எழுதினான். அவன் 'ஆம்' என்பதை எப்படி எழுதுவான்?

119. புகையிரதம் பிந்தி வந்தால் என்னுடைய மாமனார் கூட்டத்துக்குப் போயிருக்க முடியாது. புகையிரதம் பிந்தி வராமலிருந்தால் அவர் அதிற் சென்றிருக்க முடியாது புகையிரதம் பிந்தி வந்ததோ அல்லவோ என்று நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. என்னுடைய மாமனார் கூட்டத்திற்குப்போயிருக்கக்கூடுமா?

(ஆம், இல்லை, சொல்லமுடியாது)

120. ஒரு மாணவன் சதுரமான ஒரு கடதாசியை எடுத்து இடப்பக்கத்து மேல் மூலையிலிருந்து வலப் பக்கத்துக் கீழ் மூலைக்கு ஒரு நேர் கோடு கீறினான். பின்பு வலப்பக்கத்து மேல்மூலையிருந்து இடப் பக்கத்துக் கீழ்மூலைக்கு ஒரு நேர் கோடு கீறினான். இந்த இரண்டு கோடுகள் வழியே கடதாசியை வெட்டினான். அவன் கடதாசியை எத்தனை துண்டுகளாக வெட்டினான்?

(2, 3, 4, 5, 6, 7, 8.)

2ம் அப்பியாசம்

(Vம் வகுப்பு)

A

விளக்கம்:—கீழே சோடி சோடியாகப் பல சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில சோடிகளில் இரண்டு சொற்களும் ஒரே கருத்துடையன. சில சோடிகளில் இரண்டு சொற்களும் வேறு வேறு கருத்துடையன; அல்லது எதிரான கருத்துடையன. இரண்டு சொற்களும் ஒரே கருத்துடைய சோடிகளுக்கு நேரே உள்ள புள்ளிக் கோட்டில் 'ஒ' என்னும் எழுத்தை எழுதுக. மற்றைய சோடிகளுக்கு நேரேயுள்ள புள்ளிக்கோட்டில் 'எ' என்னும் எழுத்தை எழுதுக:—

உதாரணம்:—1. சிறிது, பெரிது ....'எ'......

2. சென்றான், போனான்....'ஒ'......

இதுபோலவே பின்வருவனவற்றுக்கும் விடை எழுதுக.

3. கொழுந்து, மெலிந்த .. ..
4. இன்பம், மகிழ்ச்சி .. ..
5. நிறைவான, பூரணமான .. ..
6. அங்கே, இங்கே .. ..
7. ஆம், இல்லை .. ..
8. கொடு, வாங்கு .. ..
9. முன்னே, பின்னே .. ..
10. ஒப்பு, எதிர் .. ..
11. வலிமை, பராக்கிரமம் .. ..
12. பழைய, புராதன .. ..
13. கூட்டமாக, தனியாக .. ..
14. ஆரம்பம், தொடக்கம் .. ..
15. நல்லொழுக்கம், தீயொழுக்கம் .. ..
16. சாந்தம், அமைதி .. ..
17. பிறப்பு, இறப்பு .. ..
18. விரைவு, தாமதம் .. ..
19. இரு, எழும்பு .. ..
20. ஈரமான, வரண்ட .. ..
21. துக்கம், கவலை .. ..
22. மேல், கீழ் .. ..
23. சடுதியாக, திடீரென .. ..
24. அச்சம், பயம் .. ..
25. கெஞ்சினான், மன்றாடினான் .. ..
26. அகலமான, ஒடுக்கமான .. ..
27. உள்ளே, வெளியே .. ..

B

உதாரணம்:—28. மணிக்கூடு: நேரம்:: யார்: (அடி, நீளம், நீர், மழை)
29. மேசை: மரம்:: பானை. (சட்டி, நெருப்பு, கால், களிமண்)

விளக்கம்:— 28-வது உதாரணத்தில் மணிக்கூட்டுக்கு நேரம் எவ்வாறு பொருத்தமோ அதுபோலவே யாருக்கு நீளம் பொருத்தமாயிருக்கிறது. (மணிக்கூட்டில் நேரம் பார்க்கலாம். யாரினால் நீளத்தை அளக்கலாம்). எனவே அடைப்புக் குறிக்குள் இருக்கும் நான்கு சொற்களில் நீளம் என்னுஞ் சொல்லின் கீழ் கோடிடப்பட்டிருக்கிறது.

29-வது உதாரணத்தில் மேசைக்கு மரம் எப்படிப்பட்ட பொருத்தமோ அதுபோன்ற பொருத்தமாகப் பானைக்குக் களிமண் இருக்கிறது. (மேசை மரத்தினால் செய்யப்பட்டது; பானை களிமண்ணாற் செய்யப்பட்டது. ஆகையால் அடைப்புக்குறிக்குள் இருக்கும் நான்கு சொற்களில் களிமண் என்னுஞ் சொல்லின் கீழ் கோடிடப்பட்டிருக்கிறது.

இதுபோலவே கீழுள்ளவற்றிலும் மிகப் பொருத்தமான சொற்களுக்குக் கீழே கோடிடுக.

30. ஆண்: பெண்:: தந்தை: (சகோதரன், பிள்ளை, மனைவி, தாய்)
31. காகம்: பறவை:: பசு: (குயில், பால், மிருகம், குரங்கு)
32. வயல்: நெல்லு:: கடல்: (மீன், நீளம், சமுத்திரம், வத்தை)
33. கடி: பல்லு:: பார்: (காண், நாய், கண், கால்)
34. இரத்தம்: சிவப்பு:: கரி: (புகை, கறுப்பு, கப்பல், நீராவி)
35. பானை: சமையலறை:: புத்தகம்: (கடை, வாசிகசாலை, நேரம், பக்கம்)
36. எவள்: எவன்:: அவள்: (அவை, எவை, அவன், யார்)
37. கால்: முழங்கால்:: கை: (விரல், முழங்கை, புயம், நெஞ்சு)
38. தேன்: ஈ:: பால்: (பூக்கள், பசுக்கன்று, பசு, குத்தும்)
39. நோயாளி: வைத்தியன்:: மாணவன்: (ஆண்பிள்ளை, வைத்தியசாலை, ஆசிரியன், மருந்து)
40. சேலை: பெண்:: வேட்டி: (சால்வை, ஆண், உடுப்பு, மனைவி)
41. நான்: எனது:: நீ: (படித்தாய், அவனை, உனது, உனக்கு)
42. அருளானந்தம்: அருள்:: இராசரத்தினம்: (அருட்பிரகாசம், இராசா, பெண், இரத்தினம்)
43. மனிதன்: கை:: யானை: (காடு, விரல்கள், துதிக்கை, பாதம்)

44. நாங்கள்: எங்களால்:: நீங்கள்: (அவர்களால், உங்களால், உன்னால், எங்களால்)
45. சட்டம்: மட்டம்:: பங்கம்: (அங்கம், வேங்கை, தூங்கல், கங்கு)
46. அறிவு: அறியாமை:: செல்வம்: (இன்பம், வறுமை, பணம், புத்தி)
47. அ: இ:: உ: (ஊ, எ, ஐ, ஒ)
48. பணம்: பை:: பூ: (மரம், கூடை, ரொக்கம், மலர்)
49. குற்றம்: தண்டனை:: வேலை: (தொழில், சம்பளம், சிறை, உத்தியோகம்)
50. புல்லு: மாடு:: இறைச்சி: (குதிரை, யானை, புலி, கறி)
51. பறத்தல்: பறவை:: நீந்தல்: (கடல், மீன், ஆழம், தண்ணீர்)
52. ஒளி: இருள்:: சத்தம்: (இரைச்சல், அமைதி, இரவு, வெளிச்சம்)
53. எங்கே: இடம்:: எப்பொழுது: (யார், ஏன், காலம், எவ்விடம்)
54. திருவள்ளுவர்: புலவர்:: நளன்: (உபாத்தியாயர், அரசன், மனிதன், வீரன்)

C

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எண்கள் ஏதோ ஒரு ஒழுங்குபற்றி அமைந்திருக்கின்றன. அவ்வொழுங்கு முறையைக் கவனித்து அடுத்து வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.

உதாரணம்:— 55.	1,	3,	5,	7,	9,	..		(..11, 13..)
56.	3,	$3\frac{1}{4}$,	$3\frac{1}{2}$,	$3\frac{3}{4}$,	4,	..		(..$4\frac{1}{4}$, $4\frac{1}{2}$..)
57.	23,	21,	19,	17,	15,	..	..	(.............)
58.	3,	6,	12,	24,	..	..	..	(.............)
59.	5,	$4\frac{1}{2}$,	4,	$3\frac{1}{2}$,	3,	..	..	(.............)
60.	IX,	XI,	XIII,	XV,	..	..	..	(.............)
61.	18,	19,	23,	24,	28,	29,	..	(.............)
62.	2,	10,	4,	20,	6,	30,	8,	(.............)
63.	3,	9,	27,	..	..	..	..	(.............)
64.	.01,	.1,	1,	10,	..	..	..	(.............)

65.	12.5,	11.4,	10.3,	9.2,	..	..	..	..	(......, ...)
66.	63,	IV,	64,	V,	65,	VI,	..	..	(......, ...)
67.	75,	73,	70,	66,	61,	..	..	..	(......, ...)
68.	20.6,	21,	21.4,	21.8,	..	..	..	..	(......, ...)
69.	99,	87,	74,	60,	..	..	..	..	(......, ...)
70.	4,	7,	10,	15,	18,	21,	26,	29,	(......, ...)
71.	$\frac{1}{2}$,	$\frac{1}{4}$,	$\frac{1}{8}$,	$\frac{1}{16}$,	..	..	..	..	(......, ...)

D

விளக்கம்:—கீழே ஒவ்வொரு வரிசையிலும் நான்கு நான்கு சொற்கள் இருக்கின்றன. அவற்றுள் மூன்று சொற்கள் ஏதாவதொருவகையில் ஒற்றுமையுடையன. ஒற்றுமையில்லாமல் தனியாக நிற்கும் ஒரு சொல்லைக் கண்டுபிடித்து அதற்குக் கீழே கோடிடுக.

உதாரணம்:—72. தாரை, முல்லை, பனங்கிழங்கு, மல்லிகை

73. ஓடுதல், ஆடுதல், தள்ளல், நித்திரை

74. பால், எண்ணெய், தேன், பருப்பு
75. கந்தன், பூதன், பொன்னி, நாகன்
76. வண்டி, புகையிரதம், வத்தை, மோட்டார்வண்டி
77. கோடரி, வாள், மெழுகுதிரி, உளி
78. இருத்தல், யார், அங்குலம், அடி
79. அன்பு, அநுதாபம், பொறாமை,, இரக்கம்
80. சுகம், இன்பம், முகமலர்ச்சி, துக்கம்
81. சேலை, தோடு, மோதிரம், காப்பு
82. கட்டில், தொட்டில், வட்டம், கொட்டில்
83. 67812, 39286, 78126, 62187
84. முகில், நதி, நட்சத்திரம், சந்திரன்

85. பம்பரம், கொடி, கத்தி, பந்து
86. நட, வா, வீடு, செய்தான்
87. காகம், புறு, பல்லி, கிளி
88. துவக்கு, பீரங்கி, தடி, குண்டு
89. பந்து, தோடம்பழம், கத்தரிக்கோல், பூகோளம்
90. குறைதல், தேய்தல், வளர்தல், அழிதல்
91. செருப்பு, தொப்பி, தலைப்பாகை, குல்லா
92. சதம், மதம், சத்தம், பதம்
93. குரு, ஆசிரியன், உபாத்தியாயன், மாணாக்கன்

●

E

உதாரணம்:—94. ஒரு மரத்துக்கு எப்பொழுதும் (i) பூக்கள் (ii) இலைகள் (iii) பழங்கள் (iv) கிளைகள் (v) வேர் உண்டு.

விளக்கம்:—மேலே காட்டிய வாக்கியத்தைப் பூரணமாக்குவதற்கு (i, ii, iii, iv, v) எனக் கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து சொற்களில் மிகப் பொருத்தமான ஒரு சொல்லை மாத்திரம் உபயோகிக்கவேண்டும். இவ்வாக்கியத்தில் "வேர்" என்னுஞ் சொல் மிகப் பொருத்தமானதாகையால், அதன் கீழே கோடிடப்பட்டிருக்கின்றது. ஒரு மரம் பூவில்லாமல், இலையில்லாமல், பழம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு காலத்திலும் வேர் இல்லாமல் இருக்கமுடியாது. எனவே இவ் வாக்கியத்தைப் பூரணப்படுத்தி வாசித்தால், ஒரு மரத்துக்கு எப்பொழுதும் வேர் உண்டு; என வரும். பின் வரும் வாக்கியங்களையும் அவ்வாறே பூரணப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்து அவற்றின் கீழே கோடிடுக.

95. ஒரு வீட்டுக்கு எப்பொழுதும்
(i) அறைகள், (ii) யன்னல்கள், (iii) கதவுகள், (iv) கூரை, (v) சுவர்—உண்டு.

96. தாயானவள் எப்பொழுதும்
(i) உயர்ந்தவளாய், (ii) பலமுடையவளாய், (iii) பிள்ளைப்பெற்றவளாய், (iv) கொழுத்தவளாய், (v) அன்புடையவளாய்—இருப்பாள்.

97 ஒரு பறவைக்கு எப்பொழுதும்
(i) இரத்தம் (ii) கால்கள் (iii) கூடு (iv) சொண்டு (v) சிறகு—இருப்பதில்லை

98. நாம் நன்றாகச் சாப்பிடுவதற்கு எப்பொழுதும்
(i) மேசை (ii) பழம் (iii) குடிவகை (iv) பசி (v) கோப்பை—இருக்கவேண்டும்

99. மனிதன் ஒருவனுக்கு எப்பொழுதும்
(i) இரண்டு கைகள் (ii) தாடி (iii) குரல் (iv) பலம் (v) பெயர்—உண்டு

100. ஒரு கலியாண வீட்டில் எப்பொழுதும்
(i) வெற்றிலை (ii) மலர்கள் (iii) பூமாலைகள் (iv) பலகாரம் (v) மணமகள்—உண்டு

101. மாமனார் எப்பொழுதும்
(i) அன்புடையவராய் (ii) வயதானவராய் (iii) ஆண்பிள்ளையாய் (iv) பருத்தவராய் (v) இனிமையாய்ப் பேசுவராய்—இருப்பார்

102. வாக்குவாதத்தில் எப்பொழுதும்
(i) ஒரு சபை (ii) கைகொட்டுதல் (iii) எதிர்க்கட்சி (iv) வெற்றி (v) நீதிபதி—இருக்கவேண்டும்

F

விளக்கம்:--கீழே ஒவ்வொரு வரிசையிலுமுள்ள சொற்களை ஒழுங்கான முறையில் நிரைப்படுத்தினால் ஒரு வாக்கியமுண்டாகும். வாக்கியத்திலுள்ள கருத்து சரியாகவும் இருக்கலாம். பிழையாகவும் இருக்கலாம். கருத்து சரியானதாயிருந்தால் 'ச' என்னும் எழுத்தை வலப்பக்கத்திலுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக. பிழையானால் 'பி' பின்னும் எழுத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

உதாரணம்:--காற்று, சீவிக்க, மனிதன், இன்றி, முடியாது (ச)

இந்தச் சொற்களை ஒழுங்கான முறையில் எழுதினால் 'மனிதன்' காற்று இன்றிச் சீவிக்க முடியாது என்ற வாக்கியமாகும். இது சரியான கருத்துள்ள வாக்கியம். ஆகவே 'ச' என்னும் எழுத்து அடைப்புக் குறிக்குள் இடப்பட்டிருக்கின்றது.

104. காற்றில். அங்கும், மீன்கள், இங்கும், ஓடுகின்றன. (பி)

இந்தச் சொற்களை நிறைப்படுத்தினால் 'மீன்கள் காற்றில் அங்கும் இங்கும் ஓடுகின்றன' என ஒரு வாக்கியமாகும்.

இது பிழையான கருத்துள்ள வாக்கியம். ஆகவே 'பி' என்னும் எழுத்து அடைப்புக்குறிக்குள் இடப்பட்டிருக்கின்றது.

105. இல், உதிக்கின்றது, கிழக்கு, சூரியன், திசை. (..........)
106. நீர், இனிப்பு, கடல், ஆனது. (..........)
107. அரசன், ஒவ்வொரு, உண்டு, நாட்டுக்கும். (..........)
108. விலை, உலோகம், உள்ள, தங்கம். (..........)
109. இலங்கை, இப்பொழுது, இன், தலைநகரம், அநுராதபுரம். (..........)
110. கடல், நாடுகளில், ஓரம், ஆய், வளர்கின்றன, உள்ள, செழித்து, நன்றாக தென்னை மரங்கள் (..........)
111. பூக்களில், தேனை, இருந்து, சேர்க்கின்றன, தேனீக்கள். (..........)
112. வருகின்றது, வருடத்துக்கு, ஒரு, தைப்பொங்கல், முறை. (..........)
113. மைல், ஒரு, ஒரு, பிரயாணம், முடிக்காது நத்தை, நிமிஷத்தில், செய்து. (..........)
114. அநேக, வனாந்தரத்தில், ஒரு, நதிகள், வாவிகள், உண்டு. (..........)
115. இலை, புலி, குழைகளையே, தின்னும். (..........)
116. ஆனைகள், ஆயினும், அவற்றின், மிருகங்கள், மிக, கண்கள் மிக, பெரிய, சிறியன. (..........)

G

விளக்கம்:--கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியின் இறுதியிலும் பல விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கேள்விக்கும் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

உதாரணம்:--117. புவனேஸ்வரி திலகேஸ்வரியிலும் கரியவள். ஆனால் அன்னபூரணியிலும் வெளுத்தவள். இவர்கள் மூவரிலும் அதிகம் வெளுத்தவள் யார்?
(திலகேஸ்வரி, புவனேஸ்வரி, அன்னபூரணி)

118. ஒரு கிளி 'ஆம்' என்று சொல்வதற்குப் பதிலாக 'இல்லை' யென்றும், 'இல்லை' யென்பதற்குப் பதிலாக 'ஆம்' என்றும் சொல்லப் பழகியிருந்தது. ஒரு நாள் சிறுவன் ஒருவன் அந்தக் கிளியிருந்த கூட்டுக்கருகில் ஒரு மாம்பழத்துடன் போய் நின்று "உனக்கு இந்தப் பழம் வேண்டுமா?" என்று கேட்டான். கிளி 'வேண்டும்' என்பதற்கு என்ன மறுமொழி சொல்லிற்று?
(ஆம், இல்லை, நல்லது, தேவை)

119. அன்னம்மாவுக்கும் அவளுடைய தகப்பன் கந்தையாவுக்கும் ஒவ்வொரு பிள்ளையுண்டு. கந்தையாவினுடைய மனைவி சொர்ணம்மா. மகேஸ்வரி அன்னம்மாவுடைய மகள். கந்தையாவினுடைய பேத்தியின் தாயாருக்குத் தாயார் யார்? (அன்னம்மா, சொர்ணம்மா, மகேஸ்வரி, சொல்லமுடியாது.)

120. என்னுடைய தகப்பனார் மாதத்துக் கடைசி நாளன்று சம்பளம் பெறுவார். அந்த நாளில் எங்களுக்கு விளையாட்டுச் சாமான்கள் கொண்டுவருவார். ஏனைய நாட்களில் அவர் பழமும் கதைப்புத்தகங்களும் கொண்டுவருவார். இடைக்கிடை இனிப்பும் கொண்டுவருவார். நாளைக்கு ஆடி மாதம் முதலாம் திகதி. இன்று என்னுடைய தந்தை என்ன கொண்டுவருவார்?
(விளையாட்டுச் சாமான்கள், பழங்கள், கதைப்புத்தகங்கள், இனிப்பு.)

121. நான் தெற்குத் திசையிலிருந்து ஒரு நாற்சந்திக்கு வந்தேன். நான் கொழும்புக்குப்போகவேண்டும். எனக்கு வலப்பக்கத்திலுள்ள தெரு வேறொரு இடத்துக்குப்போகிறது. நேரே போகுந்தெரு ஒரு பாடசாலைக்குப் போகிறது. கொழும்பு எத்திசையிலுள்ளது? (வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு.)

122. பின் வரும் எண் வரிசையில் 25-க்கு மேற்பட்ட ஒற்றை எண்கள் எத்தனை?
11, 99, 16, 12, 43, 41, 11, 21, 7, 97, 71, 23, 17, (2, 3, 4, 5, 6.)

123. கிராமவாசிகள் பெரும்பாலும் இரக்கமுள்ளவர்கள்; உண்மை பேசுபவர்கள்; குமாரசுவாமி பட்டினத்தான் அவன் எவ்வித மனுஷன்?
(பொய்யன், உண்மை பேசுபவன், இரக்கமுள்ளவன், இரக்கமற்றவன், சொல்லமுடியாது, இரக்கமற்ற பொய்யன்.)

124. "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற பழமொழியின் கருத்தைப் பின்வரும் வாக்கியங்களிள எது காட்டுகின்றது?
(i) சிறு வயதில் உடம்பை நன்றாக வளர்க்கவேண்டும்.
(ii) ஒருவன் பிற்காலத்தில் எப்படியிருப்பான் என்பதைச் சிறு வயதிலேயே அறியலாம்.
(iii) ஒருவன் சிறுவயதிற் பழகின பழக்கம் இறக்கும்வரை காணப்படும்.
× (iv) ஒருவன் எந்த விதையை விதைத்தான் என்பது அதன் முளையிலிருந்து தெரியும்.

125. இந்துக்களின் புதுவருடப்பிறப்பன்று, அதாவது ஏப்றில் மாதம் 13-ம் திகதி யான் பிறந்தேன். சுப்பையா என்னிலும்பார்க்க மூன்று நாட்களுக்கு இளையவன், இந்த வருடம் புதுவருடபிறப்பு வியாழக்கிழமை

அது எனது 14-வது பிறந்த தினமாகும். சுப்பையாவினுடைய பிறந்த தினம் எப்பொழுது? (ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.)

126. 124-ம் கேள்வியிலுள்ள எத்தனையாவது வாக்கியம் "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிக்குப் பொருத்தமாயிருக்கின்றது? (i, ii, iii, iv.)

127. பாடசாலை விட்டதும் பிற்பகல் 2 மணிக்கு நான் வீட்டுக்கு வருவேன். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை சங்கீத வகுப்பு உண்டு. என்னுடைய தகப்பனருக்கு வெள்ளிக்கிழமைகளிலும், புதன்கிழமைகளிலுந்தான் நடுப்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை லீவு உண்டு. அவர் என்னை ஒரு சந்தைக்குக் கூட்டிச்செல்ல விரும்புகிருர். சந்தை செவ்வாய், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளைத் தவிர்ந்த ஏனைய எல்லா நாட்களிலும் பிற்பகல் 1 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணி வரையும் நடைபெறும். எந்தக்கிழமை தகப்பனர் என்னைச் சந்தைக்குக் கூட்டிச்செல்வார்?
(ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.)

H

கீழுள்ள கதையில் ஒவ்வொரு அடைப்புக் குறிக்குள்ளும் இருக்குஞ் சொற்களுள் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்துக் கதையைப் பூர்த்திசெய்யவேண்டும். அதற்காக அடைப்புக்குறிக்குள்ளிருந்து நீர் தெரிந்தெடுக்கும் சொல்லின் கீழ்க் கோடிடுக. முழுக் கதையையும் ஒரு தரம் வாசித்தால் பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுப்பதற்கு உதவியாயிருக்கும்.

கதை

முன்னொரு (நாளிலே, நேரத்திலே, காலத்திலே, வேளையிலே) தென்னலி என்னும் (இடத்திலே, காடடிலே, காலத்திலே, ஊரிலே) இராமன் என்னும் (ஒருவன், மனிதன், ஆள், சிறுவன்) இருந்தான். (அவன், சிறுவன், இராமன்) மிகவும் அழகானவன். மற்றச் சிறுவர்களோடு விளையாடும்போது விகடமாகக் (கதைப்பான், பேசுவான், சிரிப்பான்). ஒரு நாள் இராமன் (வீட்டில், வீதியில், தோட்டத்தில்) விளையாடிக்கொண்டு நின்றான். அப்பொழுது வீதிவழியாக ஒரு (பெரியவர், செட்டியார், ஐயர்) வந்தார். பெரியவர் இராமனின் வேடிக்கைப் பேச்சுகளைக்கேட்டு (மகிழ்ந்தார், கோபித்தார், வருத்தப்பட்டார்). சந்தோஷத்தினலே அவனுக்கு ஒரு (மந்திரம், பாட்டு, உபாயம்) சொல்லிக்கொடுத்தார். அவனுக்கு அது விநோதமாயிருந்தது. ஒருநாள் அவன்

ஒரு (பாடசாலைக்கு, கோயிலுக்கு, குளத்துக்கு, ஆற்றுக்கு)ப் பக்கத்திலே நின்று பெரியவர் சொல்லிக் கொடுத்த மந்திரத்தை உச்சரித்தான், உடனே கோயிலில் இருந்த காளி ஆயிரம் முகங்களுடனும் இரண்டு கைகளுடனும் தோன்றினாள். இராமன் காளியைப் பார்த்து (அழுதான், பயப்பட்டான், சிரித்தான், ஓடினான்). காளி கோபத்தோடு ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டாள் அதற்கு அவன் "தேவி என்னுடைய ஒரு மூக்கில் சளி பிடித்து இந்த இரண்டு (கண்ணும், கையும், காலும்) போதவில்லையே. உன்னுடைய ஆயிரம் மூக்கிலும் சளி பிடித்தால் உனது இரண்டு" கைகளும் போதுமா? என்றான். காளி அவனுடைய தைரியத்துக்காக அவனுக்குப் பல வரங்களைக் கொடுத்துச்சென்றாள்.

புத்திப் பரீட்சைகள்.

(Vம் வகுப்பு)

நேரம் 30 நிமிஷம்.

A

குறிப்பு: இப் பரீட்சையில் விரைவு முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும். எனவே தெரியாத கேள்விகளைப் பற்றிச் சிந்திப்பதில் அதிக நேரத்தைச் செலவிடக்கூடாது. தெரிந்த இலகுவான கேள்விகளுக்கு விரைவாகவும், சரியாகவும் விடையெழுதியபின்னர் நேரமிருந்தால், தெரியாத கேள்விகளுக்கு விடையெழுத முயலுக.

விளக்கம்:--கீழே ஒவ்வொரு வரிசையிலும் நான்கு நான்கு சொற்கள் இருக்கின்றன. அவற்றுள் மூன்று சொற்கள் ஏதாவதொருவகையில் ஒற்றுமையுடையன. ஒற்றுமையில்லாமல் தனியாக நிற்கும் ஒரு சொல்லைக் கண்டு பிடித்து அதற்குக் கீழே கோடிடுக.

உதாரணம்:--1. தாமரை, முல்லை, பனங்கிழங்கு, மல்லிகை

2. ஓடுதல், ஆடுதல், துள்ளல், நித்திரை

3. கமலாம்பிகை, மீனும்பிகை, நடராசன், சொர்ணும்பிகை
4. இந்தியா, கங்கை, சீனு, அரேபியா
5. தொன், சங்கிலி, பெர்லாங், மைல்
6. ஜேர்மனி, அரேபியா, இலங்கை, காசி
7. இலை, வேர், படம், கிளை
8. நீ, நான், அவன், மனிதன்
9. அன்பு இரக்கம், பொருமை, தயவு
10. கங, சஞ, நத, டண
11. கொடூரமான, பயங்கரமான, நல்ல, மூர்க்கமான
12. சென்ருன், உயர்த்திஞன், கொடுத்தான், வருதல்
13. 3015, 1503, 1035, 5036

14. சுகம், சந்தோஷம், துக்கம், இன்பம்
15. வடம், வட்டம், தடம், குடம்
16. இகழ்ச்சி, நிந்தனை, புகழ்ச்சி ஏச்சு
17. சிவப்பு, பிரகாசம், பச்சை, மஞ்சள்
18. களவெடுத்தல், பொய் கூறல், விற்றல், ஏமாற்றல்
19. சுவர், கூரை, கதவு, சங்கீதம்
20. விகாரை, கோயில், பள்ளி, சந்தை
21. வீடு, குடிசை, மாளிகை, சந்தை
22. விளக்கு, சூரியன், கோடரி, நெருப்பு
23. அழகான, ஒளியுள்ள, வெளிச்சமான, மந்தமான
24. பிரயாணம், பந்தடித்தல், கிளித்தட்டு, பாடியோடல்
25. சுந்தரன், சுந்தரி, முருகன், ராமன்
26. கடல், ஆறு, மலை, குளம்
27. வைத்தியன், மருந்து, நாடகசாலை, வைத்தியசாலை

B

விளக்கம்:--கீழே கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் மும்மூன்று விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன அவற்றுள் கேள்விக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்தெடுத்து அதற்குக்கீழே கோடிடுக.

உதாரணம்:--28. நாங்கள் ஏன் புத்தகங்கள் வாசிக்கின்றோம்?

(i) காலத்தைக் கழிக்க வேறு வழியில்லாமையால்;

(ii) அறிவையும் இன்பத்தையும் தரும் ஆதலால்;

(iii) அவை மிகவும் மலிவாயிருப்பதால்.

29. சங்கீதத்தை ஏன் சனங்கள் கேட்கிறார்கள்?
(i) அது இன்பத்தைக் கொடுப்பதால்;
(ii) வீட்டிலே ஒரு பாடும்பெட்டி (கிராமபோன்) வைத்திருப்பதால்;
(iii) தங்கள் குரலுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமாதலால்.

30. பிள்ளைகள் ஏன் பாடசாலைக்குப் போகிறார்கள்?
(i) வீட்டிலிருந்தால் தாய் தந்தையருக்குத் தொந்தரவு கொடுப்பார்கள்;
(ii) பிள்ளைகள் போகாவிட்டால் ஆசிரியர்களுக்கு வேலையில்லாது போகும்;
(iii) உபயோகமான பாடங்களைக் கற்றுக்கொள்வதற்காகப் பாடசாலைக்குப் போகிறார்கள்.

31. குளிர்ந்த நாடுகளில் வசிப்பவர்கள் ஏன் கம்பளி உடை அணிந்துகொள்கிறார்கள்?
(i) கம்பளி உடை அதிகம் விலையுள்ளதாகையால்;
(ii) கம்பளி உடை குளிரைத் தடுக்குமாகையால்;
(iii) மிருகங்களிலிருந்து பெறும் உரோமத்தை உபயோகமாக்கவேண்டுமாகையால்.

32. உமது வீட்டிலிருந்து அதிக தூரம் சென்றபின் வழியில் மழை பெய்யத்தொடங்கினால் என்ன செய்யவேண்டும்?
(i) மழையில் நனையாமல் ஒதுங்கி நிற்கவேண்டும்;
திரும்பி வீட்டுக்கு ஓடவேண்டும்;
(iii) மழை விடும்வரை தெருவில் நிற்கவேண்டும்.

33. குடிசையிலும்பார்க்க வீடு ஏன் நல்லது?
(i) செல்வர்கள் வீட்டிலேதான் வசிக்கவேண்டுமாகையால்;
(ii) அது மிக வசதியானபடியால்;
(iii) அது மரத்தினாற் செய்யப்பட்டிருக்கிறபடியால்,

34. ஒரு பெட்டிக்கு ஏன் மூடி இருக்கவேண்டும்?
(i) பொருள்களைப் பத்திரமாய் மூடிவைத்திருக்கலாமாகையால்;
(ii) அது மரத்தினுற் செய்யப்பட்டிருத்தலால்;
(iii) மூடியில்லாவிட்டால் மூட முடியாது.

35. எதிர்பாராமல் உமக்கு ஒரு இடைஞ்சல் ஏற்பட்டால் நீர் யாது செய்யவேண்டும்?
(i) மனம் பதறி அங்குமிங்கும் ஓடவேண்டும்;
(ii) மனத்தைரியத்தோடு ஆலோசித்துச் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும்;
(iii) ஆறுதலாக இருந்து நடப்பதைக் கண்டுகொள்ளவேண்டும்.

36. நகர வாழ்க்கையிலும் நாட்டு வாழ்க்கை என்ன காரணத்தால் அதிக ஆரோக்கியமுள்ளது?
(i) அங்கே சனத்தொகை அதிகமாதலால்;
(ii) அங்கே வைத்தியர்கள் இல்லாதபடியால்;
(iii) அங்குள்ள நீர், காற்று முதலியன சுத்தமாயிருப்பதால்.

37. உம்முடன் ஒருவன் எதிர்பாராதவிதமாக மோதினுல் நீர் யாதுசெய்யவேண்டும்?
(i) கோபத்தோடு ஒன்றும் பேசாமல் அவனை விழித்துப்பார்க்கவேண்டும்;
(ii) நீர் யார் என்பதை அவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும்;
(iii) புன்முறுவலுடன் "காரியமில்லை நீங்கள் அதைப்பற்றி யோசிக்கவேண்டாம்" என்றுசொல்லவேண்டும்.

38. பாதரட்சைகள் ஏன் தோலினுற் செய்யப்படுதல்வேண்டும்?
(i) தோல் மலிவாக வாங்கிக்கொள்ளலாம் ஆதலால்;
(ii) தோல் அதிக காலத்துக்கு உபயோகிக்கக்கூடியதாய் பதனிடப்பட்டிருத்தலால்;
(iii) தோலினைக் கண்ணுடிபோலப் பளபளப்பாகச் செய்யலாமாதலால்.

39. ஒரே திசையை நோக்கிச் செல்லும் சகல வண்டிகளும் தெருவின் ஒரு பக்கமாகச் செல்வதேன்?
(i) அநேகருக்கு வலக்கைதான் பழக்கமாதலால்;
(ii) வண்டியில்லாதவர்கள் கல்லுப் பதித்த பாதையால் நடக்கவேண்டுமாதலால்;
(iii) அங்ஙனஞ்செய்து எதிர்பாராமல் வரும் அபாயங்களையும், வண்டிகள் ஒன்றுடனென்று மோதிக்கொள்வதையும் தடுக்கலாமாதலால்.

C

40. தை மாதத்திலுள்ள நாட்களின் தொகை ஒரு யாரிலுள்ள அங்குலத்தின் தொகையிலும் கூடியதானால் '9' என்று எழுதுக. அல்லது 'நன்று' என்று எழுதுக. ....

41. நாளை நின்று வெள்ளிக்கிழமையானால் முந்தை நாளுக்கு முதல் நாள் என்ன கிழமை— ....

42. பின்வரும் வாக்கியத்திலுள்ள உயிரெழுத்துக்களைக்கீறி அவற்றின் தொகையினைக் கூறுக.................
"அவன் எதிர்பார்த்த அந்தச் சிறுவன் இன்று பாடசாலைக்கு எக் காரணத்தாலோ வரவில்லை"

43. 'பாலாம் கமள்' ஒரு பெண்ணின் பெயரிலுள்ள எழுத்துக்கள் நிரை மாறிக் கிடக்கின்றன.
அப் பெயர் யாது? ....

44. பால், சுண்ணக்கட்டி, பஞ்சு என்பன மை அல்லது கரியைப் போலன்றி ....நிறமுடையன.
கீறிட்ட இடத்துக்கேற்ற சொல்லை எழுதுக.

45. நான் ஒரு கடிதம் எழுதி அனுப்ப விரும்புகிறேன். என்னிடம், கடுதாசி, பேனைத்தடி, பேனையலகு, உறை மையொற்றுந்தாள், முத்திரை ஆகிய இவையுண்டு. நான் வைத்திருக்கவேண்டிய இன்னொரு பொருள் யாது?
....

46. பின் வரும் வாக்கியத்திலுள்ள மிகவும் குறுகிய சொல்லை எழுதுக. ....
"கோபாலன் காலையில் எழுந்து நித்திய கடன்களை முடித்துவிட்டு உணவு கொள்ளுவான்."

47. ஒகரத்துக்கு முன் வருகின்றதும் ஒகரத்துக்குப் பின் இகரம் வராததுமான எத்தனை அகரங்கள் பின் வரும் வரிசையிலுண்டு?
அ ஓ ஒ அ உ இ ஐ உ அ ஓ இ ஆ ஒ அ ஒ ஓ ந ஆ ஐ அ ஓ ஆ ஒ ஐ அ ஒ இ ஓ அ ஆ ஓ அ ஒ அ..............

48. 'ஆனந்தம்' என்னும் சொல்லிலுள்ள எழுத்துக்களை உபயோகித்து (ஒரு எழுத்தைப் பல முறையும் உபயோகிக்கலாம்) பின்வருஞ் சொற்களில் எத்தனை சொற்களை உண்டாக்கலாம்?
ஆதனம், தனம், தந்தம், ஆனந்தன், மந்தன், தந்தனம், தம், தனவந்தன், ...

49. ஒரு கூட்டத்தில் ஒரு மனிதன் அவனுடைய மனைவி அவனுடைய மக்கள் மூவர்; அவர்களின் மனைவிமார், ஒவ்வொரு மகனுக்கும் பிள்ளைகள் ஐயைந்துபேர், ஆகிய இவர்கள் சமுகமளித்தார்கள். கூட்டத்தில் வந்திருந்தவர்களின் தொகையென்ன? ....

D

உதாரணம்:--50. ஒரு மரத்துக்கு எப்பொழுதும் (i) பூக்கள் (ii) இலைகள் (iii) பழங்கள் (iv) கிளைகள் (v) <u>வேர்</u> உண்டு.

விளக்கம்:--மேலே காட்டிய வாக்கியத்தைப் பூரணமாக்குவதற்கு (i, ii, iii, iv, v) எனக் கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து சொற்களில் மிகப் பொருத்தமான ஒரு சொல்லை மாத்திரம் உபயோகிக்கவேண்டும். இவ்வாக்கியத்தில் "வேர்" என்னுஞ் சொல் மிகப் பொருத்தமானதாகையால், அதன் கீழே கோடிடப்பட்டிருக்கின்றது. ஒரு மரம் பூவில்லாமல், இலையில்லாமல், பழம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு காலத்திலும் வேர் இல்லாமல் இருக்கமுடியாது. எனவே இவ் வாக்கியத்தைப் பூரணப்படுத்தி வாசித்தால் 'ஒரு மரத்துக்கு எப்பொழுதும் வேர் உண்டு; என வரும். பின் வரும் வாக்கியங்களையும் அவ்வாறே பூரணப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்து அவற்றின் கீழே கோடிடுக.

51. ஒரு பட்டினத்துக்கு எப்பொழுதும்
(i) திரும் வண்டிகள், (ii) நகர் காவலர், (iii) பெயர், (iv) அதிபர், (v) படக்காட்சிச்சாலைகள்—உண்டு.

52. மாமியார் எப்பொழுதும்
(i) அழகாக (ii) இரக்கமுள்ளவளாக (iii) கிழவியாக (iv) பெண்ணாக (v) நற்குணமுடையவளாக—இருப்பாள்.

53. ஒரு மனிதனுக்கு எப்பொழுதும்
(i) எலும்பு, (ii) பல், (iii) நரம்பு, (iv) கை, (v) இருதயம்—இருக்கமாட்டாது.

54. ஒரு மணிக்கூட்டில் எப்பொழுதும்
(i) இனிமையாக மணியடிக்குங் கருவி (ii) மினுக்கமான பெட்டி (iii) மணி காட்டுங் கம்பி (iv) செக்கன்ட் காட்டுங் கம்பி (v) சரியான நேரம் உண்டு.

55. ஒரு கிராமத்தில் மிகப் பழைய பொருள்,
(i) கோயில் (ii) முதிய கிராமவாசி (iii) பாலம் (iv) ஆறு (v) தெரு—ஆகும்.

56. ஒரு கொப்பி புத்தகத்துக்கு எப்பொழுதும்,
(i) மேலுறை (ii) படங்கள் (iii) பெயர் (iv) எழுத்துக்கள் (v) பக்கங்கள்—உண்டு.

57. ஒரு வனத்தில் ஒரு காலமும்,
(i) பாம்புகள் (ii) மரச்செறிவு (iii) பெரிய தெருக்கள் (iv) புலி (v) குடிகள்—இருப்பதில்லை.

E

விளக்கம்:--கீழே உள்ள ஒவ்வொரு கேள்வியின் இறுதியிலும் பல விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கேள்விக்கும் சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.

உதாரணம்:--58. புவனேஸ்வரி திலகேஸ்வரியிலும் கரியவள். ஆனால் அன்னபூரணியிலும் வெளுத்தவள். இவர்கள் மூவரிலும் அதிகம் வெளுத்தவள் யார்?
(திலகேஸ்வரி, புவனேஸ்வரி, அன்னபூரணி)

59. சுப்புலட்சுமி பாக்கியலட்சுமியிலும் மிகத் திறமையாகப் பாடுவாள்; தனலட்சுமியளவு திறயையாகப் பாட மாட்டாள். மூவரிலும் சங்கீதத் திறமை குறைந்தவள் யார்?
(சுப்புலட்சுமி, பாக்கியலட்சுமி, தனலட்சுமி.)

60. மாமரத்தின் இலை நீளமாகவும் மென்மையாகவும் இருக்கும். எங்கள் தோட்டத்தில் உள்ள ஒரு மரத்தின் இலைகள் நீளமாகவும் மென்மையாகவும் இருக்கின்றன. அம்மரம் என்ன மரம்?
(மாமரம், மாமரமாயிருக்கவேண்டிய அவசியமில்லை, மாமரமல்ல.)

61. செல்வனாயிருப்பதற்கு ஒருவன் முயற்சியுடையவனாயும், கவனமுள்ளவனாயும், வேலையை ஒழுங்காகச் செய்பவனாயும் இருக்கவேண்டும். சின்னத்தம்பி ஒவ்வொரு நாளும் காலை எட்டு மணி தொடங்கி மாலை ஆறு மணி வரையும் விரைவாக வேலைசெய்வதால் அடிக்கடி பிழைகள் விடுவான். மாரிமுத்து எட்டாம் வகுப்பில் நான்கு

வருடம் படித்து ஐந்தாவது வருடம் சித்தியடைந்தவன், ஆனாலும், கொடுக்கப்பட்டவேலையை ஆறுதலாய் யோசித்துச் சிறு விஷயங்களையும் நன்றாக அவதனித்துப் பிழையில்லாமல் வேலையைப் பூர்த்திசெய்து விடுவான். காலந் தவறாமல் வேலைக்கு வருவதால் நண்பர்கள் மாரிமுத்துவை 'மணிக்கூட்டு மாரிமுத்து' என்று அழைப்பார்கள். கந்தையா ஒரு உலோபியின் மகன். பணத்தில் மிக்க கவனமுள்ளவன். அடிக்கடி புகையிரதத்தைத் தவற விட்டுவிட்டு வேலைக்குப் பிந்திவருவான். இந்த மூன்றுபேரிலும் செல்வனாகக்கூடியவன் யார்?

(சின்னத்தம்பி, மாரிமுத்து, கந்தையா, ஒருவருமில்லை.)

62. நல்லூரில் வசிக்கும் அனைவரும் சைவர்கள். அந்தோனிமுத்து சைவனல்ல. அந்தோனிமுத்து அநுரதபுரத்தில் வசிப்பவனா?

(ஆம், இல்லை, சொல்லமுடியாது.)

63. பின் வரும் வரிசையிலுள்ள எண்களில் இரண்டு இலக்கமுடைய ஒற்றை எண்கள் எத்தனை?

9, 12, 14, 18, 16, 302, 23, 215, 48, 26, 37, 54, 145, 93, 56, 60.

(1, 2, 3, 4, 5, 6.)

64. தமிழர் சிலர் கிறீஸ்தவர்கள், கிறீஸ்தவர்கள் சிலர் ஆசிரியர்கள். எனவே தமிழ்க்கிறீஸ்தவர் சிலர் ஆசிரியர்.

(ஆம், இல்லை, சொல்லமுடியாது.)

65. கமலாவுக்கு அவளுடைய தாய் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இனிப்புக் கொடுப்பாள். கடைசியாகக் கமலா முந்தை நாள் இனிப்புப்பெற்றாள். ஆனால் நாளை நின்று என்ன கிழமை?

(செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி.)

66. "காற்றுள்ளபோதே தூற்று" என்னும் பழமொழியின் கருத்தைப் பின் வரும் வாக்கியங்களுள் எது குறிக்கின்றது?

(i) தூற்றுகிறவனுடைய தூற்றல் காற்றோடு போய்விடும்.

(ii) பிறரை நீ ஏசினுல் அவர்கள் உன்னைத் தூற்றுவார்கள்.
(iii) பிறரை நீ ஏச விரும்பினுல் கடுங்காற்றடிக்கும் சமயம் பார்த்துத் தூற்றவேண்டும்.
(iv) சமயம் பார்த்துக் காரியங்களை முடிக்கவேண்டும்.
(v) எந்த நேரமும் பிறரைத் தூற்றக்கூடாது.

(i) (ii) (iii) (iv) (v)

67. தடிப்பான தோலும் பெரிய விதைகளும் பலாப்பழத்துக்குண்டு. நேற்று என்னுடைய மாமன் பெரியதொரு பழம் அனுப்பியிருந்தார். அதற்கு வெளித்தோலும் பெரிய விதைகளும் உண்டு. அவர் அதனைத் தனது பலாத்தோட்டத்திலிருந்து பிடுங்கி அனுப்பினுர். அவர் அனுப்பியது பலாப்பழமா?

(ஆம், இல்லை, சொல்லமுடியாது.)

68. கோவிந்தன் கத்தரிக்காய் தவிர்ந்த சகல மரக்கறிகளையும் உண்பான். பேரம்பலம் மாமிசம் உண்ணமாட்டான். ஆனுல் கத்தரிக்காய்க் கறியில் அதிக விருப்பமுள்ளவன். சின்னத்தம்பி மாமிச உணவுமாத்திரம் உண்பான். இன்றைய சாப்பாட்டுக்கு மூவருக்கும் போதிய சாதமும், ஒரு தட்டில் சிறிதளவு கத்தரிக்காய்க்கறியும் வேருெரு தட்டில் சிறிதளவு கீரைக்கறியும், மற்ருெரு தட்டில் சிறிதளவு சுருக்கறியும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தட்டிலும் உள்ள கறி ஒருவருக்குமட்டுமே போதியதாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான கறித்தட்டை எடுக்கின்றனர். கோவிந்தன் எந்தக் கறித்தட்டை எடுத்தான்?

(கத்தரிக்காய்க்கறி, கீரைக்கறி, சுருக்கறி.)

F

விளக்கம்:--கீழே ஒவ்வொரு வரிசையிலுமுள்ள சொற்களை ஒழுங்கான முறையில் நிரைப்படுத்தினுல் ஒரு வாக்கியமுண்டாகும். வாக்கியத்திலுள்ள கருத்து சரியாகவும் இருக்கலாம்; பிழையாகவும் இருக்கலாம். கருத்து சரியானதாயிருந்தால் 'ச' என்னும் எழுத்தை வலப்பக்கத்திலுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக. பிழையானுல் 'பி' என்னும் எழுத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

உதாரணம்:—காற்று, சீவிக்க, மனிதன், இன்றி, முடியாது (ச)

இந்தச் சொற்களை ஒழுங்கான முறையில் எழுதினால் 'மனிதன் காற்று இன்றிச் சீவிக்க முடியாது என்ற வாக்கியமாகும். இது சரியான கருத்துள்ள வாக்கியம். ஆகவே 'ச' என்னும் எழுத்து அடைப்புக் குறிக்குள் இடப்பட்டிருக்கின்றது.

70. காற்றில், அங்கும், மீன்கள், இங்கும், ஓடுகின்றன (பி)

இந்தச் சொற்களை நிரைப்படுத்தினால் 'மீன்கள் காற்றில் அங்கும் இங்கும் ஓடுகின்றன' என ஒரு வாக்கியமாகும். இது பிழையான கருத்துள்ள வாக்கியம். ஆகவே 'பி' என்னும் எழுத்து அடைப்புக் குறிக்குள் இடப்பட்டிருக்கின்றது.

71. எழுதுவதற்கு, மை, படும், மாணவர்கள், ஆல், உபயோகிக்க .. .. (............)
72. வாள், வெட்டுவான், தச்சன், ஆல், மரத்தை .. .. .. (............)
73. ஆகாயத்தில், அநேக, ஓடுகின்றன, ஆறுகள் .. .. .. (............)
74. தமிழர்களுக்கு, மிகவும், ஆன, பனை, பிரயோசனம், மரம் .. .. (............)
75. மாமிச, அதிக, யானைக்கு, உணவில், உண்டு, விருப்பம் .. .. (............)
76. வீடுகளில், செய்வதற்காக, காவல், வளர்க்கின்றோம், நாய்களை, நாங்கள் .. (............)
77. சுரம், எங்கும், மலேரியா, ஊர், நுளம்பினால், பரவுகின்றது .. .. (............)
78. கோழை, செல்வம், மேழி, படாது .. .. .. (............)
79. கோயிலும், தாயில், இல்லை, சிறந்தொரு .. .. .. (............)
80. தேனீக்கள், இருந்து, இலைகளிலும், வேர்களிலும், சேர்க்கின்றன, தேனை .. (............)
81. தூர, செய்ய, தேசங்களுக்கு, விரைவாக, வசதிகள், பிரயாணம், உண்டு, இப்பொழுது (............)
82. நோய், இருப்பின், சுத்தமாய், அணுகும் .. .. .. (............)
83. சிறு, எந்தக், சரியாக, காரியத்தையும், பிள்ளைகள், செய்யவேண்டும், முயல .. (............)

G

விளக்கம்: கீழே சோடி சோடியாகப் பல சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில சோடிகளில் இரண்டு சொற்களும் ஒரே கருத்துடையன. சில சோடிகளில் இரண்டு சொற்களும் வேறு வேறு கருத்துடையன; அல்லது எதிரான கருத்துடையன. இரண்டு சொற்களும் ஒரே கருத்துடைய சோடிகளுக்கு நேரே உள்ள புள்ளிக்கோட்டில் 'ஒ' என்னும் எழுத்தை எழுதுக. மற்றைய சோடிகளுக்கு நேரேயுள்ள புள்ளிக்கோட்டில் 'எ' என்னும் எழுத்தை எழுதுக.

உதாரணம்:—84. சிறிது, பெரிது ....எ...........
85. சென்றான், போனான் ....ஒ...........

இதுபோலவே பின்வருவனவற்றுக்கும் விடை எழுதுக.

86. உலகம், பூமி .. ..
87. இன்பம், சந்தோஷம் .. ..
88. பாய்தல், கடத்தல் .. ..
89. ஒளி, இருள் .. ..
90. நவீன, புதிய .. ..
91. சொந்தம், இரவல் .. ..
92. தெளிவு, கலக்கம் .. ..
93. அடிக்கடி, இடைக்கிடை .. ..
94. பிஞ்சு, பழம் .. ..
95. சீக்கிரம், விரைவு .. ..
96. இயற்கை, செயற்கை .. ..
97. செய்கை, கிரியை .. ..
98. இலாபம், நஷ்டம் .. ..
99. கடைசி, முடிவு .. ..
100. முன்னேறல், பின்செல்லல் ....
101. படிப்படியாக, விரைவாக .. ..
102. விசாலம், அகலம் .. ..
103. மென்மை, வன்மை .. ..
104. கஷ்டமான, வில்லங்கமான ....
105. விருப்பு, வெறுப்பு .. ..
106. ஏறக்குறைய, கிட்டத்தட்ட ....
107. இனிப்பு, கசப்பு .. ..
108. முரடான, அழுத்தமான ....
109. ஆரம்பம், முடிவு ....
110. பகைவன், எதிரி .. ..
111. ஏற்றல், நீக்கல் .. ..

உதாரணம்:—112. மணிக்கூடு: நேரம்:: யார்: (அடி, <u>நீளம்</u>, நீர், மழை)

113. மேசை: மரம்:: பானை: (சட்டி, நெருப்பு, கால், <u>களிமண்</u>)

விளக்கம்:—112வது உதாரணத்தில் மணிக்கூட்டுக்கு நேரம் எவ்வாறு பொருத்தமோ அதுபோலவே யாருக்கு நீளம் பொருத்தமாயிருக்கிறது. (மணிக்கூட்டில் நேரம் பார்க்கலாம். யாரினால் நீளத்தை அளக்கலாம்.) எனவே அடைப்புக் குறிக்குள் இருக்கும் நான்கு சொற்களில் நீளம் என்னுஞ் சொல்லின் கீழ் <u>கோடிடப்பட்டிருக்கிறது</u>.

113வது உதாரணத்தில் மேசைக்கு மரம் எப்படிப்பட்ட பொருத்தமோ அதுபோன்ற பொருத்தமாகப் பானைக்குக் களிமண் இருக்கிறது. (மேசை மரத்தினால் செய்யப்பட்டது; பானை களிமண்ணினாற் செய்யப்பட்டது.) ஆகையால் அடைப்புக் குறிக்குள் இருக்கும் நான்கு சொற்களில் களிமண் என்னுஞ் சொல்லின் கீழ் <u>கோடிடப்பட்டிருக்கிறது</u>.

இதுபோலவே கீழுள்ளவற்றிலும் மிகப் பொருத்தமான சொற்களுக்குக் கீழே கோடிடுக.

114.	இருத்தல் : நாற்காலி:: நித்திரை செய்தல்:	(வாங்கு, கட்டில், கதிரை, மேசை)
115.	தை : மாசி:: வியாழன்:	(புதன், கிழமை, வெள்ளி, தீபாவளி)
116.	இது : இங்கே:: அது:	(அவை, எங்கே, அங்கே, கிட்ட)
117.	தொட்டில் : குழந்தை:: இலாயம்:	(பொன், இரும்பு, கடதாசி, காசு)
118.	ஒரு சதம் : செம்பு:: ஒரு ரூபா:	(பிள்ளை, வண்டு, குதிரை, கழுதை)
119.	சோறு : கறி:: பாக்கு:	(வாய், சிவப்பு, வெற்றிலை, சாப்பாடு)
120.	மூக்கு : முகம்:: விரல்:	(வாய், கை, நீளம், மோதிரம்)
121.	ஒன்று : முதலாவது:: மூன்று:	(இலக்கம், முப்பது, மூன்றாவது, இரண்டாவது)
122.	கமி : மிக:: தமி:	(தனி, கமி, நமி, மித)
123.	ஆண் : பெண்:: மாமன்:	(மருமகள், முறை, மாமி, பெண்)
124.	குடி : கிண்ணம்:: சாப்பாடு:	(இலை, கண்ணாடி, கதிரை, பெட்டி)
125.	சந்தம் : பந்தம்:: அங்கம்:	(பங்கம், மந்தம், தந்தம், சந்தம்)
126.	தோழன் : தோழி:: சேவல்:	(நண்பன், கோழி, பேடு, பெண்)
127.	கல்வி : சரஸ்வதி:: செல்வம்:	(வறுமை, பிரமா, இலட்சுமி, பணம்)
128.	குகூகெ : கெகேகை:: காகிகீ:	(குகூகெ, ~~பீகுகூ~~, கெகேகை, ககாகி)

129. 9621: 1269:: 3578: (7535, 8753, 3787, 7583)

130. அரசன்: அரசு:: புலவன்: (புலமை, பாட்டு, கவி, வறுமை)

131. இலங்கை: கொழும்பு:: இங்கிலாந்து: (பட்டினம், சீமை, அயர்லாந்து, இலண்டன்)

132. பார்: கண்:: நட: (காது, கேள், கால், இரு)

133. வன்மை: மென்மை:: புதுமை: (புதிது, முன்பு, பழைமை, நவீனம்)

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எண்கள் ஏதோ ஒரு ஒழுங்குபற்றி அமைந்திருக்கின்றன. அவ்வொழுங்கு முறையைக் கவனித்து, அடுத்து வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.

உதாரணம்:— 134.	1.	3.	5.	7.	9	..		(.....11, 13.....)
135.	3.	$3\frac{1}{4}$.	$3\frac{1}{2}$.	$3\frac{3}{4}$.	4	..		(.....$4\frac{1}{4}$, $4\frac{1}{2}$.....)
136.	5.	9.	13.	17.	21.	..	..	(..25.., ..29..)
137.	26.	23.	20.	17.	14.	..	..	(..11.., ..8..)
138.	4.	8.	16.	32.	..	..	..	(..64.., ..126..)
139.	10.	5.	20.	10.	30.	..	..	(..40.., ..15..)
140.	29.	8.	28.	7.	27.	6.	..	(..26.., ..5..)
141.	$\frac{1}{4}$.	$\frac{1}{2}$.	$\frac{3}{4}$.	1.	$1\frac{1}{4}$.	..	..	(..$1\frac{1}{2}$.., ..[illegible]..)
142.	6.	9.	14.	17.	22.	25.	..	(..30.., ..33..)
143.	2.2.	2.8.	3.4.	4.	..	..	..	(..4.6.., ..5.2..)
144.		20.	14.	19.	24.	18.	34.	(..17.., ..44..)
145.		·000001.	·00001.	·0001.	·001.	..	..	(..·01.., ..·1..)

விவேகப் பரீட்சை.

(*V, VI, VII, VIII*-ம் வகுப்புகள்) **நேரம் 30 நிமி.**

குறிப்பு: இப் பரீட்சையில் விரைவு முக்கியமானது. ஆனபடியால் கடினமான கேள்விகளைப்பற்றிச் சிந்திப்பதில் அதிக நேரத்தைச் செலவழியாமல், இலகுவான கேள்விகளுக்கு விரைவாகவும், சரியாகவும் விடை யெழுதுக. பின்னர் நேரமிருந்தால் கடினமான கேள்விகளைச் சிந்தித்து விடையெழுதுக.

இப் பரீட்சையில் அநேக கேள்விகளுக்கு (1, 2, 3, 4, 5) எனப் பல விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சரியான—பொருத்தமான விடை எதுவெனக் கண்டுபிடித்து, அதன் கீழ்க் கோடிடுக. வலப்பக்கத்தில் நேரே இருக்கும் அடைப்புக் குறிக்குள் சரியான விடையினது இலக்கத்தையும் எழுதுக.

உதாரணம்:—1. தகப்பனீ ஒருவன் எப்பொழுதும்,

1. பலசாலி, 2. வளர்ந்தவன், 3. படித்தவன், 4. மனிதன், 5. அன்புள்ளவன். ஆகவிருப்பான். .. .. (4)

2. பின்வரும் ஐந்து பொருட்களுள், நான்கு ஒரே வகுப்பைச்சார்ந்தன. இவ் வகுப்பைச்சாராது வேருகவுள்ள ஒரு பொருளைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுக.

1. சப்பாத்து, 2. முத்துமாலை, 3. சட்டை, 4. சேலை, 5. புத்தகம் .. .. (5)

சில கேள்விகளுக்கு விடை கொடுக்கப்படவில்லை, அப்படியான கேள்விகளுக்குச் சரியான விடையை அடைப்புக் குறிக்குள் எழுதுக. அப்படியான கேள்விகளுக்கு மறுமொழி எழுதும்போது கீழ்க் கோடிட வேண்டிய அவசிய மில்லை.

உதாரணம்:— பின் வரும் எண்களின் வைப்பு முறையை அவதானித்து அடுத்து வரவேண்டிய இரு எண்களையும் எழுதுக.

8, 12, 16, 20, 24,

இதிலிருந்து பரீட்சை ஆரம்பமாகிறது

1. செல்வம் என்னும் சொல்லுக்கு எதிர்க் கருத்துத் தருஞ்சொல்
   1. மெலிவு. 2. வறுமை. 3. நோய். 4. உலோபம். 5. கொழுப்பு .. ( )

2. பேனை: எழுத:: கத்தி: (?)
   1. கடிதம். 2. உறை 3. வெட்ட. 4. குத்த. 5. துளைக்க. .. ( )

3. ஒரு பட்டினத்தில் மிகவும் பழைமையானது.
   1. கோயில். 2. தெருக்கள். 3. ஆறு. 4. பெருந்தெரு. 5. பாலம். .. ( )

4. பின்வரும் எண்களின் வைப்பு முறையில் அடுத்து வரவேண்டிய இரு எண்களையும் எழுதுக.
   3, 6, 10, 15, 21, 28. ( )

5. பின்வரும் ஐந்து பொருட்களில் நான்கு ஓரே வகுப்பைச் சார்ந்தன. இவ் வகுப்பைச் சாராது புறம்பாயுள்ள ஒரு பொருளைத் தெரிந்தெடுக்க.
   1. ஈரப்பலாக்காய். 2. தேங்காய். 3. பலாக்காய். 4. முல்லைப்பூ. 5. தோடங்காய். .. ( )

6 ஞாயிறு: செவ்வாய்:; இன்று (?)
   1. நேற்று. 2 நாளைமின்று. 3. புதன். 4. முந்தை நாள். 5. நாளை. ( )

7. பெண்கள் பூக்கள் அணிவதேன்?
   1. பூக்கள் பெரும்பாலும் வெண்மையாயிருத்தலின்.
   2. பணத்தைச் செலவழிப்பதற்கு.
   3. தம்மை அழகு செய்வதற்கு.
   4. நகைகளிலும் பார்க்கப் பூக்கள் அழகாயிருக்குமாதலின். ( )

8. 72 இலும் 4 குறைந்த எண்ணுடன் ஒன்றை நான்கு தரம் கூட்டுக. .. ( )

9. கந்தன் பூதனிலும் விரைவாக ஓடுவான். பூதன் வேலனிலும் விரைவாக ஓடுவான்.
அதிக விரைவாக ஓடுபவன் யார்?
1. கந்தன். 2. பூதன். 3. வேலன். .. ( )

10. அன்பு நேசம் என்ற இரு சொற்களும்,
1. ஒரே கருத்துடையன. 2. வேறு கருத்துடையன. 3. ஒரு கருத்துடையனவுமல்ல வேறு கருத்துடையனவுமல்ல. .. ( )

11. "கைல்மபூப்லி" இதில் ஒரு பூவின் பெயரிலுள்ள எழுத்துக்கள் இடமாறிக் கிடக்கின்றன.
பூவின் பெயர் என்ன? .. ( )

12. பின்வரும் எண்களில் 24க்குக் குறைந்த இரட்டை எண்கள் எத்தனை?
18, 9, 27, 16, 2, 14, 93, 7, 17, 10, 8, 76, 22. .. ( )

13. ஒரு குதிரைக்கு எப்பொழுதும்,
1. கால்கள் 2. எலும்புகள் 3. இலாயம் 4. வாய் 5. கண்கள் இருப்பதில்லை .. ( )

14. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்னும் பழமொழியின் கருத்தைப் பின்வரும் வாக்கியங்களில் எது காட்டுகின்றது?
1. தொட்டிலில் ஆடிப் பழகினவர் சுடுகாட்டிலும் ஆடுவார்.
2. தொட்டிலிற் படுத்திருப்பவர் சுடுகாட்டிலும் படுத்திருப்பார்.
3. சிறுவயதிற் பழகிய பழக்கம் ஒருபோதும் மாறாது.
4. சிறுவயதிற் பால் குடித்தவர் கடைசிவரை பால் குடிப்பார்.
5. ஒருவனுக்கு நித்திரை ஒவ்வொருநாளும் தேவை.
6. ஒரு வேலையைத் தொடங்கினால் தொடர்ந்து முடித்துவிடவேண்டும். ..

15. 14-ம் கேள்வியில் காட்டியவற்றுள் எந்த வாக்கியம் "ஆறின கஞ்சி பழங் கஞ்சி" என்னும் பழமொழியின் கருத்தைக் காட்டுகிறது? .. .. ( )

16. பின் வரும் சொற்களில் எந்த எழுத்து அநேக முறை உபயோகிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவதானித்து அதனைக் கீறிவிடுக. அவ்விதம் கீறிய எழுத்துக்களின் தொகையை எழுதுக. விகடகவி, விவிலிய வேதம், விளம்பர விகிதம், குவிந்து, அவிந்து. .. .. ( )

17. மூன்று கொடிகள் ஒரே வரிசையில் இருக்கின்றன. சிவப்புக்கொடி நீலக்கொடிக்கு இடப்பக்கத்திலும் பச்சைக் கொடி நீலக்கொடிக்கு வலப்பக்கத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. நடுவிலுள்ள கொடியின் நிறம் யாது?
1. சிவப்பு. 2. நீலம். 3. பச்சை. .. .. ( )

18 காலை: மாலை:: நண்பகல்: ?
1. இரவு, 2. மத்தியானம், 3. நிலவு, 4. நள்ளிரவு, 5. சாயங்காலம். .. ( )

19. பின்வரும் ஐந்து சொற்களில் ஒன்று பெரும்பாலும் மற்றவற்றைப்போலில்லை. அது எது?
1. களவு, 2. நிலவு, 3. இரவு, 4 தலையணை, 5. நனவு. ( )

20. பாடசாலைக்குச் செல்லும்போது இடைவழியிலே தாமதித்து அதனால் சிறிது நேரம் பிந்திப்போகவேண்டிய தாக அறிந்தால் என்ன செய்வீர்?
1. உடனே வீட்டுக்குத் திரும்புவேன்.
2. விரைவாக நடந்து பாடசாலைக்குச் செல்வேன்.
3. இதைப்பற்றி ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதித் தபாற்கந்தோருக்குக் கொண்டுபோய்ப் போடுவேன்.
4. வீட்டுக்குச்சென்று தந்தையாரைக்கொண்டு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுவித்துக்கொண்டுபோவேன்.
5. பாடசாலைக்கு மெல்ல மெல்ல நடந்துசெல்வேன். ( )

21. அங்கும், கடலில், நீந்தி, மீன்கள், திரியும், ஆக இங்கும்.
மேலே உள்ள சொற்களை நிரைப்படுத்திப் பொருள் தரும் வாக்கியமாக்கினால் அதிற் கூறப்பட்ட கருத்து
1. சரி. 2. பிழை. 3. சரி பிழையென்று சொல்லமுடியாது: ( )

22. இன்பத்துக்கு எதிரான கருத்துடைய சொல்?
1. உலோபம். 2. துன்பம். 3. சந்தோஷம். 4. நம்பிக்கையீனம். 5. இரக்கம். .. ( )

23. ஒரு பந்தையத்தில் எப்பொழுதும், எது உண்டு?
1. மத்தியஸ்தர். 2. போட்டியிடுவோர். 3. பார்ப்போர். 4. உற்சாகம். 5. பரிசு .. ( )

24. சதம்: தசம்:: 563: (?)
(1) 653. (2) 365. (3) 536. (4) 635. (5) 356. .. .. ( )

25. பின் வரும் வரிசையில் அடுத்து வரவேண்டிய இரு எண்களையும் குறிப்பிடுக.
1·6, 2·1, 2·6, 3·1 .. .. ( )

26. "நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கன்மேல் எழுத்துப்போற் காணுமே"
இதில் வந்துள்ள தனி மெய்யெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களின் தொகையைக்கூறுக .. ( )

27. நடனசபேசன் சிற்சபேசனிலும் உயரத்திற் குறைந்தவன்; ஆனந்தன் சிற்சபேசனிலும் ஒரு அங்குலம் உயர்ந்தவன்; ஆனால் ஆனந்தனும் தருமசேனனும் ஒரே உயரமுடையவர்கள்; இவர்களில் உயரம் குறைந்தவன் யார்?
1. நடனசபேசன். 2. சிற்சபேசன். 3. ஆனந்தன். 4. தருமசேனன்.

28. நாங்கள் ஏன் சப்பாத்து அணிகிறோம்?
1. அவை தோலாற் செய்யப்பட்டிருத்தலால்.
2. அதன் சத்தம் காதுக்கு இனிமையாயிருத்தலால்
3. பணக்காரர் சப்பாத்து அணிவதால்.
4. எங்களுடைய பாதங்களை சூடு தாக்காமலும், கல், முள் உறுத்தாமலும் பாதுகாக்குமாதலால்.
5. சப்பாத்து செருப்புப்போல இருத்தலால். ( )

29. நாளைகின்று புதன் கிழமையானல் முந்தைனுள் என்ன கிழமை?
1. ஞாயிறு, 2. திங்கள், 3. செவ்வாய், 4. புதன், 5. வியாழன், 6. வெள்ளி, 7. சனி. ( )

30. தாமரைப்பூவுக்கு அநேக இதழ்களும் நீண்ட தண்டும் உண்டு. நேற்றிரவு அநேக இதழ்களும் நீண்ட தண்டும் உடைய பூவை என்னுடைய தந்தையார் எனக்குத் தந்தார். அவர் தந்தது தாமரைப்பூவா?
1. ஆம், 2. இல்லை, 3. சொல்லமுடியாது. ( )

31. "மந்திரம் சொல் மிக்க இல்லை தந்தை"
மேலே உள்ள சொற்களை நிரைப்படுத்திப் பொருள் தரும் வாக்கியமாக்கினல் அதிற்கூறப்பட்ட கருத்து
1. சரி, 2. பிழை, 3. சொல்லமுடியாது. ( )

32. "அழகான" என்பதற்கு எதிர்ச் சொல்யாது?
1. அழுத்தமற்ற, 2. அழுக்கான, 3. பயங்கரமான, 4. துன்பமான, 5. அவலட்சணமான. ( )

33. பின் வரும் எண் வரிசையில் ஒரு எண் பிழையாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கீறிவிட்டுச் சரியான எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுதுக.
1 4, 2 5, 3 6, 4 8, 5 8, 6 9. ( )

34. 'அ—ரா—புரம்' இலங்கையின் புராதன தலைநகரத்தின் பெயர். இதில் விடப்பட்டிருக்கும் இரு எழுத்துக்களையும் அடைப்புக் குறிக்குள் எழுதுக. ( )

35. கலப்பை: உழ:: துப்பாக்கி: (?)
1. அடிக்க, 2. வெடிக்க, 3. சுட, 4. குத்த, 5. வெட்ட. ( )

36. இராமநாதனுடைய தங்கச் சங்கிலியைக் களவாடியவன் சிங்களவனுமல்ல; பணக்காரனுமல்ல; சுருட்டுப் புகைப்பவனுமல்ல; சங்கிலி இருந்த அறைக்குட் சென்றவர் மூவர்.

1. பெரிய நகை வியாபாரியும் கடுமையாகச் சுருட்டுப் புகைப்பவனுமாகிய அப்துல்காதர்.
2. சுருட்டு வாங்கப் பணமில்லாத வறியவனுகிய கிரேக்க வாலிபன் சாமர்.
3. கிழமைக்கு ஒரு முறை நல்ல புகையிலை வாங்கப் பட்டணம் வரும் கிப்சன் என்னும் தோட்டத்துரை.

இம் மூவரில் சங்கிலியைக் களவாடியவர் யார்?

1. அப்துல் காதர், 2. சாமர், 3. கிப்சன்.

37. பின் வரும் ஐந்து செயல்களில் எது மற்றைய நான்கினதும் இனத்தைச் சேராதது?

1. ஏமாற்றல், 2. களவெடுத்தல், 4. பொய்சொல்லல், 4. வாங்கல், 5. கொள்ளையடித்தல்.

38. சனங்கள் வீடுகட்டுவதேன்?

1. பணத்தைச்செலவழிக்க, 2. புகழுக்காக, 3. குடியிருப்பதற்காக, 4. பறவைகளும் கூடுகட்டுகிறபடியால், 5. இடம்பமாய் வாழ்வதற்காக.

39.
1. ஆறின கஞ்சியும் பழங்கஞ்சியும் குடிக்க உதவாது.
2. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுப்பான்.
3. ஆறின கஞ்சி பழஞ் சேர்த்துக் குடிப்பதுபோல் உருசியுடையது.
4. ஒரு வேலையைத் தொடங்கினுல் தொடர்ந்து முடித்துவிட வேண்டும்.
5. கஞ்சியை ஆறவைத்துக் குடிக்க வேண்டும்.

"ஆறின கஞ்சி பழங் கஞ்சி" என்னும் பழமொழியின் கருத்து மேற்காட்டிய ஐந்து வாக்கியங்களில் எதிற் கூறப்பட்டிருக்கிறது?

40. நீங்குதல் என்னுஞ் சொல்லுக்கு எதிர்ச் சொல் யாது?
1, அழித்தல், 2. திருத்துதல், 3. சேர்த்தல், 4. மறைத்தல், 5. மாற்றுதல்

41 பின்வரும் ஒழுங்கற்ற வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி அதிற்கூறியபடி செய்க.
என்று, அடைப்புக், எழுதுக, குறிக்குள், கல்.

42. ஒரு குறித்த பாஷையில்
இரண்டு பையன்கள் என்பது—ரூ போய்ஸ் எனவும்,
மூன்று பெண்கள் என்பது—திரீ கேள்ஸ் எனவும்,
இரண்டு பையன்கள் அல்லது மூன்று பெண்கள் என்பது ரூ போய்ஸ் ஓர் திரீ கேள்ஸ் எனவும்,
எழுதப்படும். “அல்லது” என்னும் சொல்லுக்கு இப் பாஷையில் என்ன சொல்
உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

43. பின்வரும் ஐந்து சொற்களில் எந்தச் சொல் ஏனைய நான்கையும் போல் இல்லை?
1. அருவம், 2. அடுக்கு, 3. அதர்மம், 4. அசுத்தம், 5. அசரீரி.

44. பெற்றோர் பிள்ளைகளுக்குப் புத்தி கூறுவதேன்?
1. ஆசிரியர் போதிய அளவுக்குப் புத்தி கூறுமையால்,
2. தங்கள் பெற்றோர் தங்களுக்குப் புத்திகூறினபடியால்,
3. பிள்ளைகளுடைய நன்மையைக் கருதி,
4. இடைக்கிடை பிள்ளைகளைத் தண்டிக்காமல் விடக்கூடாதாதலால்
5. பிள்ளைகளுடைய துர்நடத்தையால் அவர்களுக்குத் தெண்டம் விதிக்கப்பட்டால்
அத் தெண்டப்பணத்தைப் பெற்றோர் கொடுக்க நேரிடுமாதலால்

45. மேசை: மரம்:: கத்தி: ?
1. உருக்கு, 2. கூர்மை, 3. பிடி, 4. கதிரை, 5. வாள்

46. ஒரு நெல் வயல் எபொழுதும்

1. தானியம், 2. பயிர், 3. மண், 4. உரம், 5. நீர் உண்டு

47. அரை மைல் தூரத்தில் வசிக்கும் ஒரு வைத்தியரை மழை பெய்யும்போது அவசியமாய் அழைத்து வரவேண்டியிருந்தால் என்ன செய்வீர்?

1. மழை விடும்வரை நிற்பேன்,
2. நான் வீட்டிலிருந்துகொண்டு சகோதரியை அனுப்புவேன்,
3. கடுமழை பெய்தால் குடையை வீட்டில் வைத்துவிட்டு விரைவாக ஓடிப்போவேன்,
4. குடையை எடுத்துக்கொண்டு உடனே புறப்படுவேன்.
5. தபாற்கந்தோருக்குச் சென்று தந்திமூலம் அறிவிப்பேன் ..

48. சனங்கள் கண்ணீர் விடுவதற்குரிய சந்தர்ப்பங்கள் சில பின் வருமாறு:

சனங்கள் துக்கத்தினால் அழும்போது கண்ணீர் விடுவார்கள். சில சமயங்களில் கண்களில் நீர் வரும்வரை கடுமையாகச் சிரிப்பார்கள். கண்களில் தூசி அல்லது சிறு பூச்சி விழுந்தால் கண்ணீர் வரும். புகைக்கூடாகச் சென்றால் அல்லது வெண்காயம் உரித்தால் கண்ணீர் வரும். இக்காரணங்களை நோக்கினால் கண்ணீர் வருவதற்கு இரு பிரதான காரணங்கள் உண்டென்பது தெரியும். அவை யாவை?

1. சிவப்பு, பச்சைபோன்ற பிரகாச நிறங்கள்
2. சீதோஷ்ண நிலை,
3. அளவான சந்தோஷம்.
4. தீவிரமாக மாறுபடும் மனவுணர்ச்சி,
5. கண் அழற்சி. ... ... ( )

49. பின் வரும் வரிசையில் அடுத்து வரவேண்டிய எண் யாது?
70,6 7,06 .706 .0706 ... ( )

50. பின் வரும் சொற்களைச் சிறந்த பொருள் தரும் வாக்கியமாக ஒழுங்குபடுத்தினால் இரண்டாவதாக வரும் சொல் யாது?
வேண்டும், நன்றாகத், கத்திகளை, உபயோகிக்க, தீட்டி .. ( )

51. சூரியன் என்பதற்கு அதே கருத்துடைய இன்னொரு சொல் (பரியாயப் பெயர்) கூறுக
1. ஒண்மை, 2. தினகரன், 3. உதயம், 4. பிறை, 5. ஞானம். .. ( )

52. தொப்பி: தலை:: அட்டியல்:?
1. கை, 2. கால், 3. தங்கம், 4. கழுத்து, 5. பதக்கம். .. .. ( )

53. கடிதம் அனுப்பும் காகித உறையில் எப்பொழுதும்
1. அச்சிட்ட எழுத்துக்கள், 2 அரக்கு முத்திரை, 3. கடிதம் அனுப்புகிறவருடைய பெயர்
4. ஆறு சத முத்திரை, 5. கடிதம் போய்ச் சேரவேண்டியவருடைய பெயரும் விலாசமும் இருக்க வேண்டும். .. .. .. ( )

54. பின் வரும் எண் வரிசையில், அடுத்து வரவேண்டிய இரு எண்களையும் எழுதுக.
28, 22, 17, 13, 10, ... ( )

55. பின் வரும் ஐந்து சொற்களில் எது மற்றைய நான்கினதும் இனத்தைச் சேராதது?
1. கத்தி, 2. கோடாரி, 3. வாள், 4. கத்திரிக்கோல், 5. ஆணி .. ( )

56. குருடன்: கண்:: செவிடன்: ?
1. நாக்கு, 2. சத்தம், 3. காது, 4. வாய், 5. பல், .. ( )

57. வண்டிகளுக்குச் சில்லுகள் இருப்பதேன்?
1. சில்லுகள் வட்டமாயிருப்பதால்,
2. சில்லுகள் மரத்தால் செய்யப்பட்டிருப்பதால்,
3. சில்லுகள் இல்லாவிட்டால் வண்டி ஓடும்போது சத்தம் கேட்கும்,
4. நிலத்தில் இலகுவாகச் செல்வதற்கு உதவுமாகையால்,
5. சில்லுகள் இல்லாவிட்டால் வண்டியில் ஏற்பட்ட சாமான்கள் விழுந்துவிடுமாதலால். ( )

58. 99ஐப் பார்க்கிலும் பத்துக் கூடுதலாகவுள்ள எண்ணிலிருந்து ஈரைந்தைக் கழித்து நான்கினைக் கூட்டுக. .. .. .. ( )

59. அ' என்பவனும் 'ஆ' என்பவனும் ஒரே தொகையான தேங்காய் பிடுங்கினார்கள். 'இ'என்பவன் இன்னும் ஐந்து தேங்காய் கூடப் பிடுங்கினால் 'அ' என்பவன் பிடுங்கின அளவு பிடுங்கியிருப்பான்; 'ஈ' என்பவன் 'ஆ' பிடுங்கியதிலும் ஆறு தேங்காய் கூடப்பிடுங்கினான். ஆகக் குறைந்த தொகை பிடுங்கியவன் யார்?
1. 'அ' 2. 'ஆ' 3. 'இ' 4. 'ஈ' .. .. .. ( )

60. 'தைரியம்' 'துணிவு' என்னும் இரு சொற்களும்
1. ஒரே கருத்துடையன, 2. வேறு கருத்துடையன, 3. ஒரே கருத்தோ, வேறு கருத்தோ என்று சொல்ல முடியாது .. .. .. ( )

61. 'தேகலாவி'—ஒரு பெண்ணின் பெயருக்குரிய எழுத்துக்கள் இடம்மாறிக் கிடக்கின்றன. அப்பெண்ணின் பெயர் யாது? .. .. .. ( )

62. கீழே கொடுக்கப்பட்ட எண்களில் 17க்கு மேற்பட்ட ஒற்றை எண்கள் எத்தனை?
21, 16, 24, 118, 93, 79, 19, 12, 362, 117, 115, 15, 9, 94 .. ( )

63 ஒரு கிணற்றில் எப்பொழுதும்
1. நீர், 2. சுவர், 3. படிகள், 4. மீன்கள், 5. அடித்தளம் உண்டு .. ( )

64. "ஆனைக்கும் அடிசறுக்கும்". இப்பழமொழியின் கருத்தினைப் பின்வரும் வாக்கியங்களில் எது குறிக்கின்றது?
1. ஆனை அடி சறுக்கும் என்று ஓடுவதில்லை,
2. எதிர்காலத்தில் நடக்கப் போகும் சம்பவங்களுக்குரிய அறிகுறிகள் முன்னரே தோன்றும்.
3. பெரியவர்களும் சில சமயங்களில் பிழைவிடக்கூடும்,
4. ஆனை பெரிய மிருகமாதலால் அடி சறுக்கிவிடும்,
5. ஆனைக்கு அதிக தூரத்தில் நிற்கவேண்டும். .. .. ( )

65. 64-ம்கேள்வியிற்கூறிய வாக்கியங்களில் எது "ஆனைவரும் பின்னே மணியோசை வரும்முன்னே" என்னும் பழமொழியின் கருத்தைக் குறிக்கின்றது? .. .. .. ( )

66. மெய்யெழுத்துக்களில் இரண்டாம், நாலாம், ஆறும் எழுத்துக்கள் போலுள்ள இரட்டை எண்ணுள்ள எழுத்துக்களைக் கீறிவிட்டால் கீறப்படாத எட்டாவது எழுத்து எது? எழுத்து ஒன்றையும் கீறி விடை காணக்கூடாது.
க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன். .. ( )

67. நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வடக்கே 100 யார் நடந்து பின்னர் வலப்பக்கம் திரும்பி 100 யார் நடந்து பின்னரும் வலப்பக்கம் திரும்பி 100 யார் நடந்து ஓரிடத்தில் இளைப்பாறினேன். என்னுடைய வீட்டிலிருந்து நான் இளைப்பாறிய இடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது? .. .. ( )

68, பின்வரும் ஐந்து சொற்களில் எது மற்றைய நான்கினதும் இனத்தைச் சேராதது?
1. நேர்மை, 2 உண்மை, 3. வாய்மை, 4. வெம்மை, 5. மெய்ம்மை. .. ( )

69. தேகத்துக்கு: உணவு:: இயந்திரத்துக்கு:?
1. விறகு, 2. சக்தி, 3. சில்லுகள், 4. நெருப்பு, 5. புகை .. .. ( )

70. நீர் ஒரு பண முடிச்சை வழியிலே கண்டெடுத்தால் யாது செய்ய வேண்டும்?
1. தெருவிலே பணத்தைப் பரப்ப வேண்டும்,
2. கிட்டடியில் உள்ள ஆற்றில் எறிந்துவிடவேண்டும்,
3. ஒருவருக்கும் காட்டாமல் வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டும்,
4. அதனையிழந்த சொந்தக்காரனைக் கண்டுபிடிக்கத் தெண்டிக்கவேண்டும்; தவறினால் அதனைக் கிட்டடியுள்ள பொலீசுத்தானத்தில் ஒப்படைக்க வேண்டும்.
5. சொந்தக்காரன் வந்து கேட்கும்வரைவீட்டிலே வைத்திருக் வேண்டும். .. ( )

71. நன்று, இரும்பு, இவற்றை, தங்கம், உட்கொள்வது, பொன், வெள்ளி.
மேலேஉள்ள சொற்களை நிரைப்படுத்தப் பொருள்தரும் வாக்கியமாக்கினால் அதிற்கூறப்பட்ட கருத்து
1. சரி 2. பிழை, 3. சரி பிழை முடியாது .. .. ( )

72. 'தினசரி', என்னுஞ் சொல்லுக்கு
1. இடைக்கிடை, 2. அடிக்கடி, 3. நாள்தோறும், 4. பகற்காலம், 5. சாயங்காலம்
என்று பொருள். .. .. ( )

73. மனிதன் ஒருவன் எப்பொழுதாவது ஒருநாள்
1. பணக்காரனாவான், 2. சுகமில்லாது போவான், 3. கோபிப்பான், 4. சாவான்,
5. மணஞ்செய்வான் .. .. ( )

74. வரகு: குரவ:: குருதி:
1. தானியம், 2. குருகு, 3. திருகு, 4. இரத்தம், 5. குரக்கன் .. ( )

75. பின் வரும் எண் வரிசையில் அடுத்து வரவேண்டிய இரு எண்களை எழுதுக
$2\frac{1}{4}$, 3, $3\frac{3}{4}$, $4\frac{1}{2}$, 5 .. .. ( )

76. 'ஒ' வுக்கு முன்னிருப்பதாகவும், 'பி' க்குப் பின் தொடராததாயுமுள்ள 'ப' கரங்களை எண்ணி எழுதுக.
ப ஒ ப ஒ பி கு ப ஒ பி ம ஒ ப ஒ ஒ ப ர ப ஒ ப ஒ கு ப ஒ ப ஒ ப அ ஒ பு ஒ ர .. ( )

77. இந்தச் சங்கத்திற் சேர்ந்த அங்கத்தவர்கள் சிங்கள பௌத்தர்கள். சோமபாலன் சிங்கள
பௌத்தன். அவன் இந்த சங்கத்திற் சேர்ந்தவனா?
1. ஆம், 2. இல்லை, 3. திட்டமாகச் சொல்ல முடியாது .. .. ( )

78. ஒருவன் தனது தொப்பியை எடுப்பதற்குப் பதிலாக உமது தொப்பியைத் தவறுதலாக எடுக்குஞ் சமயத்தில்
நீர் என்ன செய்ய வேண்டும்?
1. உரத்த சத்தத்துடன் 'கள்ளன்' என்று கூப்பிட வேண்டும்.

2. பொலீசுத்தானத்துக்கு அவனைக் கூட்டிச் செல்ல வேண்டும்.
3. "இது எனது தொப்பி" என்று புன்சிரிப்புடன் கூறவேண்டும்.
4. உமது தொப்பி அவனுடையதிலும் பழையதானால் அதை எடுத்துச் செல்ல விடவேண்டும். .. .. ( )

79. ஒக்டோபர் மாதம் 4-ம் திகதி செவ்வாய்க் கிழமையானால் செப்டெம்பர் மாதம் 28-ந் திகதி என்ன கிழமை?
1. ஞாயிறு, 2. திங்கள், 3. செவ்வாய், 4. புதன், 5. வியாழன்,
6. வெள்ளி, 7. சனி. .. .. .. ( )

80. வைரம் நவமணிகளில் வெள்ளை நிறமுடைய விலையுயர்ந்த கல்; ஒளி வீசிக்கொண்டிருக்கும்; நேற்றுப் பிச்சைக்காரன் தெருவிற் கண்டெடுத்த மோதிரத்தில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் விலையுயர்ந்த வெள்ளை நிறமுடைய கல் பதித்திருந்தது. அது வைரமா?
1. ஆம், 2. இல்லை, 3. சொல்லமுடியாது. .. .. ( )

81. யாழ்ப்பாணத்தில், பணம், வேளாளர், இன்றி, படுகிறார்கள், கஷ்டம், உள்ள, செய்ய, வேளாண்மை மேலே உள்ள சொற்களை நிரைப்படுத்திப் பொருள் தரும் வாக்கியமாக்கினால் அதிற் கூறப்பட்ட கருத்து
1. சரி, 2. பிழை, 3. சரி பிழை சொல்லமுடியாது .. .. ( )

82. 'நட்பு' என்பதற் எதிர்ச் சொல் யாது?
1. ஆசை, 2. வருத்தம், 3. பகை, 4. ஆச்சரியம், 5. அச்சம் .. .. ( )

83. பின் வரும் எண் வரிசை ஒழுங்கை ஒரு எண் கெடுக்கிறது. அந்த எண்ணை வெட்டி நீக்கிவிட்டுச் சரியான எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுதுக.
11, 15, 10, 20, 9, 25, 8, 30, 4, 35, 6. ( )

84. ம—வலி—ங்கை:— இலங்கையிலுள்ள ஆற்றின் பெயர். விடப்பட்ட எழுத்துக்களை அடைப்புக் குறிக்குள் எழுதுக. .. .. .. ( )

85. அறிவு: அறியாமை: ஒளி: ?
1. நிலா, 2. இருள், 3. சூரியன், 4. பிரகாசம், 5. விளக்கு .. .. ( )

86. போகின்ற வழியில் உடைந்த கண்ணாடித் துண்டு காணப்பட்டால் நீர் என்ன செய்வீர்?
1. நான் பொலீசாருக்கு அறிவிப்பேன்,
2. அவற்றை எடுத்து ஒரு புறமாக வைப்பேன்,
3. அவற்றைக் கவனியாமற் செல்லுவேன்,
4. அதில் நின்று சகலருக்கும் அறிவிப்பேன்,
5. அவற்றை அங்கே விட்டு வைத்தவனைக் கண்டுபிடித்துத் தண்டிப்பேன் .. ( )

87. பின் வரும் சொற்களில் எது மற்றைய நான்கினதும் இனத்தைச் சேராதது?
1. கரி 2. மை, 3. மயிர், 4. பால், 5. ஓட்டறை .. .. ( )

88. என்னுடைய அயலவன் வீட்டுக்கு இன்று காலை விருந்தினர் மூவர் வந்தனர். முதல் வந்தவர் வைத்தியர்; அவர் வந்து போனபின் நொத்தாரிசு ஒருவர் வந்தார்; ஒரு மணித்தியாலத்துக்குப்பின் போதகர் ஒருவர் வந்தார். அவ்வீட்டில் என்ன நிகழ்ந்திருக்க வேண்டும்?
1. கலியாணம், 2. சண்டை, 3. மரணம், 4. களவு, 5. தானம் .. ( )

89. விலங்குகள், மிக, எல்லாவற்றிலும், பெரிய, உடையது, யானை, உருவம்
மேலேயுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருள் தரும் வாக்கியமாக்கினால் கடைசிச் சொல்லின் முதலெழுத்து யாது? .. .. .. ( )

90. 1. காக்கையின் கண்ணுக்கு அதன் குஞ்சு பொன்னிறமாகத் தோன்றும்.
2. பிறந்தவுடன் காக்கைக் குஞ்சுகள் பொன் நிறம்.
3. காக்கைக்குப் பொன்னின் அருமை தெரியாது.
4. எவருக்கும் அவரவர் பிள்ளைகள் அருமை.
மேலே காட்டிய வாக்கியங்களில் எது "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்னும் பழமொழியின் கருத்தைக் காட்டுகின்றது? .. .. .. ( )

91. "ஜயம்" என்பதன் பொருள் யாது?
1. வெற்றி, 2. சந்தோஷம், 3. சந்தேகம், 4. விபரீதம், 5. அறிவு .. ( )

92. நினைப்பு என்பதன் எதிர்ச்சொல் யாது?
1. மறதி, 2. ஞாபகம், 3. அன்பு, 4. காதல், 5. களிப்பு .. .. ( )

93. குழப்பம்: அமைதி:: யுத்தம்:
1. சேனை, 2. துவக்கு, 3. பீரங்கி, 4. குண்டு, 5. சமாதானம் .. ( )

94. ஒரு தந்தையானவன் தன் மகனிலும் பார்க்க எப்பொழுதும் எதிற்கூடியவன்?
1. அறிவில், 2. உயரத்தில், 3. பருமனில், 4. வயதில், 5. பலத்தில். .. ( )

95. குதிரை: கனைத்தல்:: நரி?
1. குள்ளம், 2. ஊளையிடல், 3. காடு, 4. நாய், 5. ஓடுதல் .. ( )

96. ஒரு சிறுவனுடைய ஒரேயொரு சட்டை அழுக்குப்படிந்துவிட்டால் அவன் யாது செய்யவேண்டும்?
1. அவன் உடுத்திருந்த வேட்டியையும் அழுக்காக்க வேண்டும்.
2. இனிமேல் அணிய முடியாது போகும்வரை அணிந்துகொள்ள வேண்டும்.

3. சட்டைய வறிய பிள்ளைக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டும்.
4. அழுக்கு நீங்கும்படி தோய்க்க வேண்டும்.
5. தம்பியைக் கோபித்து ஏச வேண்டும். .. .. .. ( )

97. பின் வரும் எண் வரிசையின் ஒழுங்கைக் கவனித்து அடுத்த இரு எண்ணையும் குறிப்பிடுக.
3·08 3·1, 3·12 .. .. .. ( )

98. என்னுடைய நண்பனொருவன் அவசரப்பட்டு எழுதிய கடிதம் ஒன்று இன்று எனக்குக் கிடைத்தது. அதில் "நான் இன்று காலிக்கு நடந்து வந்து சேர்ந்தேன்; நேற்று இப்பட்டினத்துக்கு அரை மைலுக்கு அப்பால் எனது உறுப்பு முறிந்துவிட்டது" என்று எழுதினான். முறிந்த உறுப்பு எது?
1. வலக்கை, 2. இடக்கால், 3. இடக்கை, 4. வலக்கால். .. .. ( )

99. உமக்குத் தெரியாத ஒருவரைப்பற்றி உம்மிடம் யாராவது கேட்டால், நீர் என்ன சொல்லவேண்டும்?
1. அவர் குற்றமில்லா ஒரு ஆள்.
2. அவரைப்பற்றி அதிகம் சொல்ல ஒன்றுமில்லை.
3. அவரை எனக்குத் தெரியாதபடியால் யான் ஒன்றும் சொல்ல முடியாததற்காக என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும்.
4. நான் போய் அவருடன் சிநேகஞ் செய்யவேண்டும்.
5. அவர் நல்லவர் .. .. ( )

100. அதிதி: திதி:: ஆசனம்:?
1. இடம், 2. சனம், 3. பிச்சைக்காரன், 4. நாற்காலி, 5. தினம் .. ( )

பரீட்சை A

விடை



1 ....

2 ....

3 ....

4 ....

5 ....

6 ....

7 ....

8 ....

9 ....

10 ....

11 ....

12 ....

பரீட்சை B



	விடை
1	4
2	5
3	3
4	4
5	2
6	1
7	1
8	3
9	2
10	4
11	3
12	2

பரீட்சை C



	விடை
1	3
2	3
3	2
4	4
5	4
6	1
7	3
8	2
9	4
10	3
11	2
12	1

பரீட்சை D



விடை

1. 4, 2
2. 3, 5
3. 2, 4
4. 5, 3
5. 2, 4
6. 1, 3
7. 2, 4
8. 2, 3
9. 3, 1, 4
10. 2, 5, 4
11. 2, 3, 4
12. ....,..........

புள்ளிகள் பதிவதற்குரிய மாதிரிப் பத்திரம்

இந்நூலாசிரியருக்குப் புள்ளி விவரங்களை அனுப்பும்பொழுது கீழ்க்காட்டிய மாதிரியாக வேறொரு தாளில் பதிந்து அனுப்புமாறு ஆசிரியர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

5 ஆம் வகுப்புப் பரீட்சை

பாடசாலையின் அல்லது டிஸ்திறிக்கின் பேர்...Royal College...... கிட்டிய தபாற் கந்தோர்.........................

இல	மாணவர் பெயர்	வயசு † வருஷம் மாதம்	ஆணோ * பெண்ணோ	பெற்ற புள்ளி
1				
2				
3				
4				
5				
6				
7				
8				
9				
10				
11				
12				
ஆதியன				

† நடக்கும் வருடத்து ஜனவரி மீ 1-ந் தேதியன்று.

* ஆண்பிள்ளையாயின் "ஆ" எனவும் பெண்பிள்ளையாயின் "பெ" எனவும் குறிப்பிடுக.

தலைமை ஆசிரியர் கையொப்பம்............................

வகுப்பு ஆசிரியர் கையொப்பம்............................

தேதி............................

புள்ளிகள் பதிவதற்குரிய மாதிரிப்பத்திரம்

இந்நூலாசிரியருக்குப் புள்ளி விவரங்களை அனுப்பும் பொழுது, கீழ்க்காட்டிய மாதிரியாக வேறொரு தாளில் பதிந்து அனுப்புமாறு ஆசிரியர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

5-ம், 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளின் பரீட்சைகள்

பாடசாலையின் அல்லது டிஸ்திறிக்கின் பெயர்..Methodist College. கிட்டிய தபாற்கந்தோர்..[illegible]......

ஐந்தாம் வகுப்பு					ஆறாம் வகுப்பு					ஏழாம் வகுப்பு					எட்டாம் வகுப்பு				
மாணவனின் இல. §	வயசு † வரு.	மாதம்	ஆணோ * பெண்ணோ	பெற்ற புள்ளி	மாணவனின் இல. §	வயசு † வரு.	மாதம்	ஆணோ * பெண்ணோ	பெற்ற புள்ளி	மாணவனின் இல. §	வயசு † வரு.	மாதம்	ஆணோ * பெண்ணோ	பெற்ற புள்ளி	மாணவனின் இல. §	வயசு † வரு.	மாதம்	ஆணோ * பெண்ணோ	பெற்ற புள்ளி
32	10	9	ஆண்	56															

§ வரவு இடாப்பிலுள்ளபடி மாணவரின் இலக்கத்தைக் குறிப்பிடுக, பெயர் எழுதவேண்டியதில்லை,
† நிகழும் வருடத்து ஜனவரி மீ 1-ந் தேதியன்று.
* ஆண்பிள்ளையாயின் "ஆ" எனவும் பெண்பிள்ளையாயின் "பெ" எனவும் குறிப்பிடுக.

தலைமையாசிரியர் கையொப்பம்:..[illegible]........................ வகுப்பு ஆசிரியர் கையொப்பம்.............................(5ம் வகுப்பு.)
(6ம் வகுப்பு.)
(7ம் வகுப்பு.)
(8ம் வகுப்பு.)

தேதி......[illegible]..........